[Regist]ered No. 1514]    12    [December 1927.



# செங்குந்த மித்திரன்.

SENGUNTHA MITHRAN

REGISTRAR OF BOOKS — JAN 1928 — MADRAS

உள்ளுறை


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | ௪௭௫ |
| செங்குந்த மித்திரன் | ஷ |
| ஆண்டு நிறைவு விழா | ௪௭௬ |
| நேயர்க்கு அறிக்கை | ௪௭௭ |
| செங்குந்தரும் சிவசயிங் கிரியமும் | ௪௭௯ |
| மார்கழி மாதம் | ௪௮௨ |
| மக்கள் கடமை | ௪௮௩ |
| கட்சிப் பிரதி கட்சிகள் | ௪௮௯ |
| உண்மைச் செங்குந்தரும் பொட்டுகட்டுவோரும் | ௪௯௨ |
| செங்குந்தர் கிளர்ச்சி | ௪௯௩ |
| சங்கத்தின் பிரசாரம் | ௪௯௯ |
| வர்த்தமானம் | ௫௦௭ |
| சட்டதிட்டங்கள். | |


[Publish]er: T. N. Sabapathi Mudaliar, Madras.

208440



திரிகை வாயிலாகவும் இப்பொழுது தெரிவித்துக் கொள்ளுகிறோம். முதலியார் அவர்கள் சீரிய குலாபிமானங்கொண்டு, தமது முனிசிபாலிடியின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் தொகையினருள் முக்கால் பங்குக்கு மேற்பட்டிருக்கும் நமது இனத்தவரின் சௌகரியங்களையும் முன்னேற்றத்தையும் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துத் தொண்டியற்றி, நம்மவரது நன்றியறிதலுக்கும் மெச்சுதலுக்கும் பாத்திரராவாரென்றே நம்புகின்றோம். இதற்கு அவரது பல வருஷத்திய அனுபவம் துணை நிற்குமாக.

## நம்மவர் பட்டம்பகலில் கோட்டையை விடேல்.

இச்சஞ்சிகையின் ஆராய்ச்சிப் பகுதியில், நம்மவர் பல இடங்களிலும் சீருஞ்சிறப்புந் துலங்கத் தொன்றுதொட்டு இயற்றி வந்த சிவத்தொண்டுகள் அநேகம் நாளடைவில் நம்மவரது அசட்டையினாலும் ஒற்றுமையின்மையாலும் கைசோர விடப்பட்டும் அயலார் கைப்பற்ற விடப்பட்டும் வந்தமைக்கு உதாரணமாக இரண்டொரு குறிப்புக்கள் வெளியிட்டிருக்கிறோம். பட்டம்பகலில் கோட்டையை விட்டதைப்போன்ற இத்தகைய விருத்தாந்தங்கள் அளவில்லாதன எமக்கு எட்டுகின்றன. இவற்றைக் கருதும்போது நம்மவர் பேதைமையை என்னென்று சொல்வது! நாம் தொன்மை உரிமை பாராட்டி இயற்றற்குரிய தொண்டுகளையும் வகித்தற்குரிய அதிகாரங்களையும் அயலார் அவாவி அபகரிக்க விட்டுவிட்டது எவ்வளவு பரிதபிக்கத் தக்கது! அபகரித்தவர்கள் அவற்றால் பெருமையடைந்துவிட்டனர்; இழந்தவர்களானநாமோ தாழ்மையைச் சம்பாதித்துக் கொண்டோம். என்னே நமது அறிவின்மை!

## நம்மவருள் கட்சிப் பிரதிகட்சிகள்.

இவ்வளவு தாழ்மைக்கும் பிற்போக்கிற்கும் காரணம் நம்மவர்களுள் அநாவசியமாகவும் அபரிமிதமாகவும் ஏற்பட்டிருக்கும் கட்சிப்பிரதிகட்சி பேதங்களேயாம் என்பது, பொதுவிஷயப் பகுதியில் தோன்றும் ஒரு வியாசத்தினின்றும் மிகவும் விளக்கமாக வெளியாகின்றது. இவ்வியாசத்தை அன்பர்கள் பன்முறையும் படித்து, நம்மவர் எல்லோருக்கும் படித்துக்காட்டி, வேண்டிய சீர்திருத்தத்தைக் கூடிய சீக்கிரம் செய்துவைக்க முயலுவார்களாக. அரசியல் முறையில் கட்சிகள் ஏற்படுவது நாட்டின் முன்னேற்றத்துக்குத் துணையாக நிற்கின்றதென்பது இது விஷயமாக அனுபவமும் ஆராய்ச்சியு முள்ளவர்கள் அபிப்பிராயமாகும். ஆனால் ஓரே குலத்தவருள் கட்சிப் பிரதிகட்சிகள் தோன்றுவது எவ்விதத்திலும் அக்குலத்தின் முன்னேற்றத்திற்கும் கௌரவத்திற்கும் இயைந்ததாகாது. குலாபிமானந் தழைத்துக் குலமுன்னேற்றஞ் சித்திப்பதற்கு ஒற்றுமை அவசியமாகும். கட்சிகள் தோன்றுமாயின், இவ்வொற்றுமைக்குப் பங்க மேற்படுவதோடு, குலத்தின் கௌரவத்திற்கும் மேம்பாட்டிற்கும் சிதைவு தோன்றுவது திண்ணம். இதை நம்மவர் கிராமங்கள் பலவற்றிலும் கண்கூடாகக் காண்கின்றோம். கோயில் விவகாரங்களில் கட்சிபேதங்கள் ஏற்பட்டுக் கட்சிக்காரர்கள் ஒருவர்மெதாருவர் கழிகளையும் கற்களையும் பிரயோகித்துக் கொள்வதோடு நில்லாது, வீதி வலமாகக் கொண்டுவரப்படும் விக்கிரகங்களும் இவற்றின் தாக்கலை உணரும் நிலைக்குக் கொண்டுவந்து வைத்திருப்பது, எவ்வளவு கேவலமாக நம்மவரைப்பற்றி மற்றவர் பேசுவதற்கு இடந்தருகின்றது என்பதை அன்பர்கள் அறியாமலிரார். இவ்வாறு அயலார் இகழ்ச்சிக்குப் பாத்திரராக நடந்துகொள்வது எவ்வளவு மதியீனம் என்பதை இனியாவது நம்மவர் உணர்ந்து சீர்திருந்துவார்களாக. இவ்விஷயத்தில் அங்கங்கே உள்ள செங்குந்தர் சங்கங்கள் மிகவும் சிரத்தையெடுத்து உழைத்து நம்மவருள் ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்க முன்வருமென எதிர்பார்க்கின்றோம்.



## தென்னிந்திய செங்குந்த மஹாஜனசங்க சட்டதிட்டங்களும் கிளைச் சங்கங்களை நிறுவுதலும்.

தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் சட்டதிட்டங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் இச் சஞ்சிகையின் கடைசியில் பிரசுரித்திருக்கிறோம். அவற்றில் வரையறுத்துள்ளபடி, ஆங்காங்குள்ள நம்மவர் சங்கங்கள், தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் கிளைகளாக்கப்பெற்று, அதன் அங்கங்களின் உரிமைகளை அடைந்து, மேலும் மேலும் ஊக்கமும் ஆதரவும் கொண்டு நம்மவர் முன்னேற்றத்திற்கு உழைக்கும் வண்ணம் பலப்படுத்தப் பெறுமென நம்புகின்றோம். சங்கங்கள் இல்லாத பல இடங்களிலும் விரைவில் சங்கங்கள் நிறுவி, அவற்றைத் தலைச் சங்கத்தின் கிளைகளாகச் சேர்த்துச் செங்குந்தர் வளர்ச்சியை ஓங்கச் செய்யுமாறு ஆங்காங்குள்ள பிரமுகர்களை வேண்டிக்கொள

கின்றோம். அடுத்த மாசி பங்குனி மாதங்களிலாவது ஒரு செங்குந்த மஹாநாடு கூடும் வழியை நாம் தேடுதல் வேண்டும். இதனிடையில் கிளைச்சங்கங்கள் பல தோன்றித் தலைச்சங்கத்துக்கு இப்பொழு திருப்பதைவிடப் பன்மடங்கு வலிவேற்படல் அவசியமாகும். குலாபிமானிகள் இவ்விஷயத்தில் அதிக சிரத்தையெடுத்துக் கொள்ளல் இன்றியமையாததாகின்றது. கிளைச்சங்கங்கள் அநுசரிக்கவேண்டிய முறைகள், தலைச்சங்கத்துக்குக் கட்டவேண்டிய கட்டணம், தலைச்சங்கத்தின் அங்கத்தினராகத் தத்தம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல், மஹாநாடு கூட்டும்போது கவனிக்கவேண்டிய விதிகள் முதலியவற்றைப் பற்றி மேலே குறிப்பிட்ட தலைச்சங்க சட்ட திட்டங்களினின்றும் தெரிந்து கொள்ளலாம். ஏதாவது விளக்கமாகாத விஷயமிருப்பின் தலைச்சங்க அமைச்சருக்கெழுதித் தேற்றமடையலாம். கிளைச்சங்க ஸ்தாபனத்திற்குத் தலைச்சங்கத்தின் ஒத்தாசை வேண்டியதாயின் அதைத் தலைச்சங்கத்தின் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொண்டால் அவர் இதற்கென ஒரு பிரசாரகரை அநுப்புவார். குலாபிமானங் கிளைத்து ஒற்றுமையுணர்ச்சி பூத்து நம்மினம் ஓங்குவதற்கு எத்தகைய தொண்டு செய்யவும் நமது தலைச்சங்கம் கடமைப்பட் டிருக்கின்றது.

இங்ஙனம், அன்பர்கள் ஆதரவை அவாவும்
'பத்திராசிரியர்.'

## 'செங்குந்த மித்திரன்' ஆண்டு நிறைவு.

'செங்குந்த மித்திர'னுக்கு இம்மாதத்தோடு ஓராண்டு நிறைகின்றது. இது வரைக்கும் இவனிழைத்த தொண்டு வெகு சிறிதாயினும், அதையும் மெச்சிப் பல குலாபிமானிகள் அவனுக்கு வாழ்த்துக்களும், அவன்பால் வேண்டுகோள்களும் விண்ணப்பங்களும் முறையீடுகளும் எழுதியனுப்பி யிருக்கின்றனர். நமது கிளைச் சங்கங்கள் பல 'மித்திரன்' ஆண்டு நிறைவு விழா கொண்டாட நினைத் திருப்பதாகக் கேள்விப்பட்டு மகிழ்கிறோம். இவற்றின் பயனை வரும் ஆண்டுகளிலும் 'மித்திரன்' முன்னினும் பன்மடங்கு ஆதரவடைந்து உற்சாக மூட்டப்பெற்று மிகுந்த வீரியத்துடன் தொண்டியற்றுவானென்றே நம்புகின்றோம்.



எனினும், கழியும் இவ்வாண்டில் ஆயிரத்துக்கு அதிகப்பட்ட அன்பர்கள் பத்திரிகையைப் பதினொரு மாதங்களுக்கும் இலவசமாகப் பெற்று இன்னும் சந்தா தொகையை அநுப்பாமலிருப்பதை நினைக்க எமக்கு மிகவும் வருத்தமுண்டாவதுடன், அன்னவர் பால் ஒருவிதமான பரிதாப உணர்ச்சியும் உதிக்கின்றது. என்னே இவர்களது உறக்கம்! என்னே இவர்களது அபிமானமின்மை! ஆண்டு முடிவிலாவது அவர்கள் சந்தா தொகையைச் செலுத்திவிடுவார்கள் என்னும் நம்பிக்கையுடன் இம்மாதமும் அவர்களுக்குப் பத்திரிகையை அநுப்புகின்றோம்.

1928-ஆம் ஜனவரி மாதத்தில் (பிரபவ, தை) நமது 'செங்குந்த மித்திர'னுக்கு இரண்டாம் ஆண்டு துவக்குகின்றது. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையை இரண்டாம் ஆண்டில், முன்னினும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிச் சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில், நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம்.

ஆகவே, அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்க வேண்டுமென்னுங் கொள்கை நம்மவருள் பரவுமானால், 'மித்திர'னுக்கு வலிவேற்பட்டு, இதைவிடச் சிறந்த மாதப்பத்திரிகை தமிழ்நாட்டில் இதுவரை தோன்றியதில்லை என்னும் புகழிற்கு நம்பத்திரிகை பாத்திரமாக்கப் படுவதுடன், நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையு மென்பதில் யாதொரு ஐயமுமிருக்க வேண்டியதில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்கு செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

மகாஜனசங்க அமைச்சர்கள்

## சந்தா நேயர்கட்கு அறிக்கை

இம்மாதத்திய சஞ்சிகை ஒவ்வொன்றிலும் சில ஆர்டர் கார்டுகள் வைத்திருக்கின்றோம். அவற்றில் ஏதகனுவ சந்தா நேயா

களாக உள்ளவர்கள் கைபொப்பமிட்டு அடுத்த வருஷத்துச் சந்தா தொகையாகிய ரூ. 1—8—0-ஐ. மணியார்டர் செய்து அனுப்புவதோடு, மிருந்தவைகளில் தமது உறவினரையும் அன்பர்களையும் கையொப்பமிட்டு அனுப்பிச் சந்தாவைச் செலுத்தி 'மித்திர'னை ஆதரிக்குந் தூண்டுமாறு வேண்டிக் கொள்கின்றோம். **1928**-௵ ஜனவரி௴ **10** தேதிக்குள் இரண்டாம் வருஷத்துச் சந்தாவை முன்பணமாக அனுப்பாத சந்தா நேயர்களுக்கு அடுத்த சஞ்சிகையை வி. பி. போஸ்டில் ரூ. 1—11—0-க்கு அனுப்புவோம். அதை மறுத்துவிடாமல் பணத்தைக் கட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு அவர்களை வேண்டிக்கொள்கின்றோம். மறுத்துவிடுவதால் சங்கத்திற்கும் பத்திரிகைக்கும் மூன்றணா நஷ்டமேற்படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக. பத்திரிகையை வி. பி. போஸ்டில் பெறுவதைவிட பணத்தை மணியார்டரில் முன்னதாக அனுப்புபவர்களுக்கு மூன்றணா இலாபமேற்படும் என்பதையும் அன்பர்கள் கவனிக்க வேண்டுகின்றோம். மேலும், ஒரே கிராமத்தையோ ஒரே கிளைச்சங்கத்தையோ சேர்ந்தவர்கள் தனித்தனி ஆர்டர் கார்டுகளைத் தபால் தலையொட்டிப் போட்டுத் தனித்தனியாகச் சந்தாவை மணியார்டர் செய்வதைவிட, மொத்தமாகச் சேர்த்து ஆர்டர் கார்டுகளைப் பாகெட் போஸ்டில் அனுப்பிச் சந்தா தொகையை மொத்தமாக மணியார்டர் செய்வார்களானால் செலவு மிகவும் குறையுமென்பதையும் அவர்கள் கவனிக்க வேண்டுகின்றோம். எவ்வித மனுப்பினும் ஜனவரி 10 தேதிக்குள் எமக்குப் பணம் சேர்ந்துவிட வேண்டும்.

செங்குந்த மித்திரன் ஆபீஸ் மானேஜர்.

---

ஒருவிஞ.

பாரில்அம்மை யப்பன்வளர் வரையோன் றின்பேர்
பரவைதனில் வளருமொரு செந்துவின்பேர்
சீருடையோர் வள்ளலின்பேர் ஓர்புள் ளின்பேர்
சிறுவர்தம்பேர் பாஷையின்பேர் மாத்தொன் றின்பேர்
வீரமிகும் விலங்குகளு ளொருபேர் யார்க்கும்
மேவுமவ யவத்தொருபே ருயர்மலைப் பேர்
சேருமிச்சொல் நடுவெழுத்தி லொருவ னித்தச்
செகம்விளக்க வுதித்தனன் பேர் செப்புவீரே.

R. நா. திருவையாறு.



# ஆராய்ச்சிப் பகுதி

## செங்குந்தரும் சிவகைங்கரியமும்

உயிர்ப்பகுதிகள் பலவற்றுள்ளும் சிறந்த மக்கள் தம்முள் கல்வி கேள்விகளிற் பயின்று நுண்ணறிவுடையராய் நன்னெறிக்கண் வழாது நின்று, தமக்கென வாழாது தமதென்பும் பிறர்க்குரித்தெனக்கொண்டு எவ்வுயிரிடத்தும் அன்புசெலுத்தும் பெருந்தகையாளரே மேலோரெனப் பெறுவர். இத்தகைய மேலோர் பிறர் நலங்கருதிச் செய்த பல்வகை முயற்சிகளுள், திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம் முதலிய பக்தி நூல்களை இயற்றி வைத்தலுமொன்றாம். அவ்வாறன்னாரியற்றியருளிய நூல்களிலுள்ள விஷயங்களைப் பின் வந்த சிலர் தம்மனம் போனவாறும், தஞ்சமயக் கோட்பாட்டிற் கேற்றவாறுமாகக் கூட்டியும், குறைத்தும், திரித்தும் வைக்கலாயினர். கம்பநாட்டார் தாமியற்றிய இராமாயணத்திற்கு விரிவுரை சொல்லிக்கொண்டிருந்த ஓரிடத்திற் றாமின்னாரென யாருமறியாவண்ணமிருந்து கேட்டு "இவ்விராமாயணத்தில் யாமியற்றிய பாக்களும் சில வுள" எனக் கூறியதாக வழங்கும் நம் நாட்டில், மேற்சொல்லியவாறு, குறுகிய நோக்கங்கொண்ட சிலர் அரிய நூல்களில் நுழைந்து அவற்றிலுள்ள விடயங்களைக் குறைத்தும், கூட்டியும் திரித்தும் வைப்பது சகசமேயாம். ஆகவே, பண்டைக்காலந் தொட்டுத் தெய்வ பக்தியிற் சிறந்து விளங்கி, அளவிறந்த பக்த சிரோமணிகளையும், ஒழுக்கமேம்பாடுடைய அறிஞர்களையும் தோற்றுவித்த செங்குந்த குலத்தில் அவதரித்த பல நாயன்மாரது மரபைச் சேக்கிழார் சுவாமிகள் இயற்றியருளிய திருத்தொண்டர் புராணத்தில் பிற்காலத்தவர் காட்டாதொழிந்தனர் என்பதும் நம்பக்கூடியதாகவே இருக்கிறது.

அறுமுகக் கடவுளின் அருந்துணைவராகிய வீரர் ஒன்பதின்மர் வழிப்போந்த குந்தகுலமக்கள், சோழர்களுக்குச் சேனைத்தலைவராயிருந்து கலிங்கம், மகதம், ஈழம், மலையாளம், வங்கம் முதலிய பல நாடுகளையும் வென்று வெற்றிக்கொடி காட்டியதன்றிச், சிவாலயங்கள் தோறும் திருப்பணி, நித்திய நைமித்தியம் முதலிய பக்தி மிகுதியாற்செய்து சைவ நன்னெறியைப் போற்றி

வந்தனர் என்பது, நம் தமிழ் நாட்டுச் சிவாலயங்களிற் காணப் பெறும் கல்வெட்டுகளாலும், பல பழைய நூல்களாலும் விளங்கா நிற்கும்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர் பெருமான் சிரச்சிங்காதனத்தில் வீற்றிருந்து பாடியருளிய தெய்வீகம் வாய்ந்த 'ஈட்டி எழுப' தென்னும் பிரபந்தத்தில், "வீதிவிடங்கர் என்னும் தியாக ராஜப் பெருமான் எழுந்தருளிய திருவாரூர், திருக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளிலியூர், திருவாய்மியூர், திருமறைக்காடு ஆகிய எழு சிவத்தலங்களுக்கும், திருவெண்காடு, சிதம்பரம், திருவையாறு, திருச்சாய்க்காடு ஆகிய சிவத் தலங்களுக்கும் ஆதிமுதல் தர்ம கர்த்தர்களாக இருந்துவரும் செங்குந்த கூட்டங்கள் வாழி" எனப் பொருள் தரும்.

"விடங்கமே மாதிவீதி விடங்கமாரூர் வெண்காடும்
நடங்கொளுந் தில்லைமூதூர் பஞ்சநன் னதி சாய்ங் காடும்
இடங் கொள் மாகாளமேழும் இடைமருதூர் செங்காடும்
தொடங்கிய தருமவாட்சிச் செங்குந்தர் தொகுதிவாழி"

என்னும் செய்யுளாலும் குந்தரது சிவபக்தியும் தொண்டும் எத்தகைத்தெனத் தெற்றென விளங்கும்.

## சம்பாதியர்க்கு அமுதளிக்குஞ் சிறப்பு

கலியுக வாரம்பத்தில் வேதாசலமென்னும் திருக்கழுக்குன்றத்தின்கண் அருந்தவமியற்றிய பூடா விருத்தாவென்னும் முனிவர்முன் முக்கட்கரும்பாகிய முதல்வன் தோன்றி 'எம்மைக் குறித்துத் தவங்கிடக்கும் நுங்கட்குத் தற்போது சாரூப பதவி யளித்தனம்; இக்கற்ப முடிவில் எம்முடன் இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சிய பதவி தருவம்' என்றருளினர். அதைக் கேட்ட முனிவர் இருவரும்,

"நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்காக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்னும் சொல்லரசின் மறைமொழியை மறந்து, பெருமானை நோக்கி, 'ஐயனே! கற்பனை கடந்ததாய அப்பதவியை எங்கட்கு இப்போதே தந்தருளல் வேண்டு'மெனக் கேட்கப், பரமசிவம், 'எம



தாணையை மறுத்த நீங்கள் கழுகாய்ப் பிறந்து உலகத்திற் றிரியக் கடவீர்' என்று சபித்தனர்.

பின்னர் காளகண்டமூர்த்தி கருணைகூர்ந்து சோர்வுற்று நின்ற இருவரையும் நோக்கி, 'நீவிர் இருவரும் காசிபரிடத்தில் இரண்டு கழுகுகளாகப் பிறந்து நும் மூக்குகளால் இம்மலையின் மேல் கீறுவீராயின் அங்கு ஆகாயகங்கை அலைவீச வந்துண்டாகும். நாடோறும் அதில் நீராடி எம்மைப் பூசித்து வருவீராயின் கலியுக முடிவில் முத்தி பெறுவீர்' என்று அநுக்கிரகித்தனர். அவ்வாறே இருவரும், காசிப முனிவரிடத்திற்சென்று சம்பு ஆதி என்னும் பெயருடன் பிறந்து பரமசிவத்தின் கட்டளைப் படித் தெய்வத்தன்மை யமைந்த வேதகிரியின்கண் இன்றும் வாசஞ்செய்து வருகின்றனர்.

இத்தகைய சம்பு ஆதி என்னும் முமுக்ஷுக்கள் இருவருக்கும் பண்டைக் காலந்தொட்டு உணவளித்து அவர்கள் உறும் பேறு பெற்றுய்யுமாறு உதவி வருவது செங்குந்தரே என்பதை முத்தமிழ்க்கடலாகிய கூத்தர்பிரான்,

"அம்பாழி மூழ்கியொரு கற்பமெலாங் கிடக்கினுமென் அழலி னின்று
வெம்பாமே வெளிக்காலுண் டக்காலை வெளியில்விடா திருந்தாலென்னே
வம்பாரும் இதழியணி வேணியனார் வேதமலை வலம்வந் தீண்டும்
சம்பாதிக் கமுதளிக்கும் சயகுந்தம் போல்வினவத் தாரா வன்றே"

என்னும் பாவினால் உணர்த்துகின்றார். இதன் பொருள் 'ஒரு கற்ப காலமெல்லாம் கடலில் மூழ்கித் தவஞ் செய்து கிடக்கினும் யாது பயனைத் தரும்? பஞ்சாக்னி மத்தியில் நின்று சரீரம் புழுங்காமல் வெளியில் உலாவுகின்ற காற்றை உணவாகக் கொண்டு, உள்ளிருந்து இடைபிங்கலை வழியாகப் பன்னிரண்டங்குலம் செல்லாநின்ற காற்றைக் கும்பித்துச் சுழிமுனையிற் செலுத்தி யோகஞ்செய்து ஒரு கற்பகாலமிருந்தாலும் யாது பயனைத் தரும்? வாசனைபொருந்திய கொன்றைமாலையைத் தரித்த சடாமகுடத்தையுடைய வேதகிரிநாதர் வாழ்கின்ற கழுக்குன்றத்தை வலமாக வந்து நெருங்கிய சம்பு, ஆதியென்னும் கழுகுகளுக்குத் தினம் உணவளித்து மோக்ஷநிலையை அடைவிக்கும் வெற்றிபொருந்திய நவவீரர்களது செங்குந்தம்போலக் கேட்டவுடன் கொடுக்கமாட்டாதன மற்றைத் தவங்கள்' என்பதாம்.

இவ்வரிய திருத்தொண்டை நடத்திவந்த திருக்கழுகுன்றத்தை யடுத்த மாணும்பதியின்கண் வதியும் செங்குந்தர்கள் அதை ஒரு பண்டாரத்தைக் கொண்டு சிலகாலம் நடத்திவந்தனர். நாளடைவில் அப்பண்டார வமிசத்தினர் அத்தொண்டு தமக்கே உரியதெனக் கைப்பற்றிக்கொண்டனர். இவ்வாறே அளவிறந்த கோயில்கள் மடங்கள் முதலியவற்றை வெகு சிரமப்பட்டுக் கட்டுவித்து அவற்றைப் பின்னர்ப் பேதமை, ஒற்றுமையின்மை, ஊக்கமின்மை முதலியவற்றால் ஏறக்குறைய சென்ற நூறு ஆண்டுகளாக பிறர் கைப்பற்ற விட்டுவருகின்றனர் என்பதைச் செங்குந்த சகோதரர்கள் யாவருமறிவர்.

சகோதரர்களே! உறங்காதீர்கள். கண்விழித்துப் பாருங்கள். உலகப்போக்கை யறிந்து அதற்குத் தக நடந்துகொள்ளுங்கள். சூரனையும் அவன் தம்பியரிருவரையும், வெற்றிவேலை உற்ற துணையெனக்கொண்டு அழித்துத் தேவரைச் சிறைமீட்டு வாகைசூடிய நவவீரர் வழித்தோன்றல்களாகிய நீங்கள், உண்மையாகவே சீர்பெற விரும்புவீராயின், சமூகமுழுவதையும் அடிமையாகக்கொண்டு கொடுங்கோல் செலுத்திவரும் 'அஞ்ஞான' மென்னும் சூரனையும், 'வறுமை' 'உட்பகை' என்னும் அவன் தம்பியரிருவரையும், கல்வி ஞானம் என்னும் வெற்றிவேலை உற்ற துணையெனக்கொண்டு அழித்துத் தேவர்களாகிய உங்கள் பழம் புகழ், சுயமரியாதை, வீரம் முதலியவற்றை உங்கள் பிறப்புரிமையாக்கி மக்களைப்போல் உலவ முயலுங்கள்.

மா. அ. கனகசபை முதலியார்.

## பஞ்சாக்கரமும் திருநீறும்

பாடற்கினிய வாக்களிக்கும்; பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்;
கூடற்கினிய அடியவர்தம் கூட்டமளிக்கு; குணமளிக்கும்;
ஆடற்கினிய நெஞ்சே! நீ அஞ்சேல், என்மேல் ஆணைகண்டாய்;
தேடற்கினிய சீரளிக்கும், சிவாயநம என்றிடு நீறே திருவருட்பா

---



# விரதப் பகுதி

## மார்கழி மாதம்.

மாதங்களெல்லாவற்றிலும் மார்கழி மாதமே சிறந்ததென்பது வைதிக சமயத்தாரது கொள்கையாம். இதுபற்றியே கீதாசாரியராகிய கிருஷ்ண பரமாத்மாவும் 'மாதங்களுக்குள்ளே யான் மார்கழி மாதமாக இருக்கிறேன்' எனக் கூறியுள்ளார். இம்மாதம் பீடை மாதங்களில் ஒன்றெனவும் சொல்லுவதுண்டு. முதற்கண் மார்கழி பீடைமாத மாதல் எவ்வாறென்பதைக் கூறுதும். இராவண சம்மாரம், திரிபுரசம்மாரம், இரண்ய சம்மாரம், பாரதம் முதலிய யுத்தங்கள் நடந்த மாசி, ஆடி, புரட்டாசி, மார்கழியாகிய நான்கு மாதங்களும் அத்தகைய மாதங்களேயாம். அதனால் இம்மாதங்களில் யாதொரு சுபகாரியங்களும் செய்வதில்லை. அவற்றுள் பாரதயுத்தம் மார்கழியில் நடந்தது.

## மார்கழிச் சிறப்பு.

30 நாழிகை கொண்ட பகலும் 30 நாழிகை கொண்ட இரவும் சேர்ந்து ஒரு நாளாகிறது. இரவின் அந்தம்பாகமாகிய கடைசி ஐந்து நாழிகை வைகறை, விடியற்காலை அல்லது உஷத்காலம் எனப் பெறும். இக்காலமே, பகல்முழுதும் விஷயங்களிற் புகுந்து விவகரித்து அலுப்புற்ற கருவிகரணங்கள் இளைப்பாறிப் புதுவலிமை பெற்றிருத்தலின் பிரம்மத்தியானத்திற்குரிய காலமாகப் பெரியோர்களால் சொல்லப்பட்டு வருகிறது. ஆகலின் வைகறை நாளிற் சிறந்த பாகமாகும்.

நாம் ஒரு வருஷமென்று சொல்லும் பன்னிரண்டு மாதங்களடங்கிய காலமானது தேவர்களுக்கு ஒரு நாளாகிறது. உத்தராயணமாகிய தை முதல் ஆனிவரையில் தேவர்களுக்குப் பகலும், தக்ஷணாயனமாகிய ஆடி முதல் மார்கழிவரையில் இரவுமாகின்றன. ஆகவே, மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறையாம். அதுவே அவர்களுக்குத் துயிலெழுந்து கடவுளை வழிபடுதற்குரிய காலம். ஆதலின் அம்மாதத்தைச் சிறந்ததெனக் கொண்டு தினந்தோறும் வைகறையிற் றுயிலெழுந்து மார்கழிப் புதுநீராடி வீடு, தெரு முதலியவற்றைச் சுத்திசெய்து அலங்கரித்துக் கடவுட் பூஜை, பாராயணம் முதலியவை செய்து சிறப்புறக் கொண்டாடுகிறோம்.

## திருவாதிரைச் சிறப்பு.

தினந்தோறும் கடவுளுக்கு ஆறுகால பூஜை நடந்து வருவதுபோலவே, தேவர் நாளாகிய வருஷத்தில் தேவதேவனுக்கு

சபாபதிக்கும் ஆறு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. அவை நடைபெறுங் காலங்களை,

"சித்திரையி லோணமுதல் சீரானியுத்திரமாம்"

என்னும் செய்யுளானறிக. அவ்வாறு அபிஷேகங்களிலும் மார்கழித் திருவாதிரை அபிஷேகமே சிறந்தது.

சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் முதலிய 25 சிவமூர்த்தங்களுக்குள்ளே இராஜமூர்த்தமாய் விளங்குவது நடராஜ மூர்த்தமேயாம். இம்மூர்த்தியே விராட்புருஷனது இருதயஸ்தானமாகிய சிதாகாசத்தில் 27 சுவாலைகளையுடைய வாசிகைபென்னும் பிரணவ சகிதமாயிருந்து சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்தொழில் நடனத்தைச் செய்யாநிற்பர். சபாபதி ஐந்தொழிலியற்றுவதை,

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைய புவனமும் எண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் அமைத்த கைத்தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் அமைத்ததோர் கரமே"
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்து நின்று
ஊட்டுவ தாகும் நின் ஊன்றிய பதமே
அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சிதபதமே"

என்னும் பிரமாணத்தானறிக.

மார்கழியில் நடைபெறும் அபிஷேகாதிகள் நடராஜர் செய்தருளும் பஞ்சகிர்த்தியத்தைக் குறிக்கின்றன. அஃதாவது, சபாபதி ஆஸ்தானத்திற்கு வருதல் (புடை பெயர்ச்சி) சிருஷ்டியையும், மண்டபத்தில் அபிஷேகாதி நடத்தல் திதியையும், வெள்ளைசாத்து (வெள்ளாடையினால் மறைத்தல்) யாவையும் தன்னிடத்தொடுக்கித் தான் தனித்திருக்கும் நிலையாகிய சம்மாரத்தையும், சாந்து சேவை ஆன்மாக்களுக்கு வினைப்பயனை மறைத்து ஊட்டுவித்தலாகிய திரோபவத்தையும், தரிசனம் அநுக்கிரகத்தையும் காட்டும். இது ஆருத்திராதரிசனமெனப் பெறுமே யொழிய உற்சவமெனப் பெறுதலில்லை. தரிசிக்க முத்திதரும் இத்தகைய நடராஜமூர்த்தியினது விசேஷ தரிசனம் கிடைப்பதும் மார்கழி மாதத்திலேயாம்.

(இன்னும் வரும்)

மா. அ. கனகசபை முதலியார்.



## பொது விஷயங்கள்

### மக்கள் கடமை.

கடமை, கடப்பாடு, உறுதி என்பன ஒரு பொருட்சொற்கள். இக்கடமையையே மக்கட்பேறு என்பர் அறிவர். ஆதலின், தன் கடமையைச் செய்ய இயல்ாதவன் மக்கட்பேற்றையடைய இயலாதவனாவான். எனவே, இத்தகையானை மக்களுட்பதர் என வுரைப்பதில் ஒருவித இழுக்கும் இன்று.

இனி, இக்கடமையைச் செய்ய அறிவு, ஆண்மை, ஊக்கம், அருள் முதலியன நன்கு அமைந்திருக்க வேண்டும். இவைகள் நன்கு அமைவுற வுடையோனே மக்களிற் றலைமை பெற விளங்குவான்.

பொருளுள்ளோர், "நூற்றுக்குமேல் ஊற்று" என்னும் எண்ணம் உடையவர்களாகி மேன்மேலும் பொருளீட்டும் எண்ணத்தையே மேற்கொள்ளலாகாது. எவ்வழியிற் றம்பொருள்வர வேண்டும் என்பதை அவர்கள் கவனித்தல் வேண்டும். ஈண்டு அவர்களைச் சோம்பலிருந்து தேடாதழிக்கக் கூறவில்லை. பொருளையீட்டி யுண்பவனே சிறந்தோனாவான் என்பது ஒருதலை. ஆயினும், தாங்கள் தேடிய பொருளால் பிறருந் தாமும் பயனடைதலின்றி, சேமித்தலையே பொருளாகக் கொண்டிருக்கின்ற இவ்வொன்றையே நாம் கண்டிக்க வேண்டுவது. இங்ஙனம் இவர்கள் ஈட்டிய பொருள்களால் இவர்கள் அடையும் பயனென்ன? இத்தகையோர்,

"வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலும் அத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்க அஃதன்றோ
எய்ப்பினில் வைப்பென் பது."

என்னும் முதுமொழியை நன்கு கவனித்தல் வேண்டும்.

அறஞ்செய்யும் வழிதாம் பலவழியாம். அவற்றில் தற்கால நிலைக்கேற்ப முக்கியமானவை: உண்ணவும் உடுக்கவும் வழியின்றி வருந்தும் ஏழைமக்களை யாதரித்தலும், அவர்கட்குக் கல்வி புகட்டும் வழியிற் பொருளுதவி புரிதலுமேயாம். இக்கடமையேயக் கடமையினுஞ் சிறந்து விளங்குவது. நம்முன்னோர் செய்தவாறு மடங்களைக் கட்டி அவற்றில் மடாதிபதிகளையும் அவர்கட்குக் குற்றேவல் செய்பவர்களையும் நியமித்தலிற் பொருளையழிப்பதிற் பயனின்று. இச்செய்கையை முற்காலத்தவர் எப்பயன் கருதிச்

செய்தனவோ அப்பயனை அறவே நீக்கி விளங்குகின்றன தற்போதுள்ள மடங்கள். பெரும்பாலும் இம்மடங்களில் மடமையே குடிகொண்டு மடங்களை யழித்துவிட்டன. இவற்றை அறிவுளோர் அறிவர். இன்னொரு விஷயம் முக்கியமாய்க் கவனித்தல் வேண்டும். அதாவது, நம்முன்னோர்கள் கட்டிய சத்திரங்களிருக்கும் நிலைமையை அறிவுளோர் பலரும் அறிதல் வேண்டும் என்பது. அந்தோ! இவ்வன்னதானஞ் செய்யும் சத்திரங்களில் ஏழை மக்களுக்கு உணவு கிடைக்குமா? சில சத்திரங்கள் சோம்பேறிகளாயினும் பணக்காரர்களாயினும் பிராமணர்களுக்கு மட்டுமே உணவளிக்கின்றன; சில வைணவர்களுக்கு மட்டுமே உணவளிக்கின்றன; செட்டிகளுக்கு மட்டுமே உணவளிப்பவை மற்றுஞ் சில. இச்சத்திரங்களெல்லாம் வருணபேதமின்றி யாவருக்கும் உணவளிக்கக்கூடாதா? தாமே தம்மை யாதரித்துக் கொள்ளுதற்கு இயலாத ஏழை மக்களையன்றோ உணவும் உடையும் அளித்துக் காக்கவேண்டும்?

இனி, ஏழைமக்கள் கல்விப்பேற்றை யடையுமாறு பல கல்விச் சாலைகளை யமைத்தல் வேண்டும். அவற்றில் அவர்களுக்கு உண்ணவும் உடுக்கவும் உதவவேண்டும். இக்கல்விப் பேற்றை யீதலே பெரும்பயனும். பொருளுள்ளோர் தம்போல் பொருளுடையோரையே விரும்பி அவர்களை வரவழைத்தலையும், அவர் பொருட்டு அதிகமாகப் பொருளை யழித்து விருந்து செய்வித்தலையும் கண்கூடாகக் காண்கிறோம். இவ்விருந்தில் செல்வர்களே வரவேற்கப்படுகின்றனர். ஏழை மக்களுக்கு இடமில்லை அந்தோ! இவ்விருந்து செய்வித்தலின் பயனென்ன? தங்களுக்குச் செல்வாக்கு மிகவேண்டும் என்பதன்றோ கருத்து! இவர்களின் பரிதாபநிலையைக் கவனியுங்கள். எச் செல்வந்தனும் தனக்கு ஒருவன் விருந்தளிக்கவில்லையேயென்று வருந்தான்; விருந்துண்ணவிட்டால் அவன் பட்டினியாயிருப்பதில்லை. இங்ஙனமாகவும் மிகப் பணச்செலவுள்ள இவ்விருந்தை ஏன் செய்தல் வேண்டும்? இவர்கள் விருந்தில் 40-பேருக்குத் தயாரிக்கும் உணவு ஏழை மக்களில் 160-பேருக்கு மேலேயே யுண்ண இடந்தரும். இவர்கள் ஒரு பிரபுவினுடைய அன்பிற்காகச் செய்யும் விருந்து நூற்றுக் கணக்கான ஏழைமக்களின் அன்பிற்காகச் செலவிடலாம். செல்வம் சகடக்காற்போன்றதாதலால், செல்வமுள்ளவனென்று கருதும் ஒரு மனிதனின் அன்பைவிட, செல்வமில்லாதவர்களென்று கருதும் பல மனிதர்களின் அன்பே சிறந்ததென்பது பலருந் தெள்ளிதின் உணரத்தக்க விஷயமாம்.

மற்றும் வயிற்றுக்கின்றி வருந்தும் ஏழை மக்கள் இட்டதைப் புண்டு வயிறு நிறைந்ததற்காகப் பெருமகிழ்வு எய்தி வாயார வாழ்த்



திச் செல்வார்கள். இங்ஙனம் இவர்கட்கு இட்டு இவர்களின் அன்பைப் பெற்று இவர்கள் தன்னை வாழ்த்துவதைக் கண்டு மனங்கசியப் பெருமகிழ்வெய்த முயலாத செல்வம் படைத்தவர்கட்குப் பயனென்? பிரபுக்களுக்காகச் செய்யும் விருந்தைவிட ஏழைகட்கு இடும் அறக்கூழே சிறந்ததல்லவா? தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் வன்மையுள்ளவர்களே அவர்களின் நண்பர்கள் தங்கள் வீட்டில் நடக்கும் விசேஷங்கட்கு வரவேண்டும் வரவேண்டும் என வற்புறுத்தி யழைப்பதையும், ஏழைமக்கள் வந்தாலும் 'மிகுந்த பிறகு வா' என்று அனுப்பிவிடுவதையும் நம் நாட்டில் யாவரும் கண்கூடாகக் காண்கிறோம். அம்மவோ! இவர்களின் கல்வியறிவும் பொருட்பயனும் இருந்தவாறென்னே!

மேலும், மந்திர மன்றங்களிலும் பிறமன்றங்களிலும் அங்கத்தினராகத் தேர்ச்சிபெறப் பெரும்பாலும் ஏழைமக்களின் உதவியே வேண்டும். ஏழை மக்களின் அன்பை இவர்கள் முன்னரே பெற்றுள்ளாரானால், தாங்கள் தேர்ச்சிபெறும்பொருட்டு ஆயிரக்கணக்காகப் பொருள் விரயஞ்செய்ய வேண்டியதில்லை. அந்தோ! இவர்கள் அச்சமயங்களில் செலவிடும் பொருள்கள் எம்முறைகளிற் செலவாகின்றன என்பது பரிதபிக்கத் தக்கதொன்று. பணமுடையாரால் தேர்வுபெற வேண்டியதாயினும், ஏழைமக்களை யாதரிப்பவரைத் தேர்ந்தெடுக்காதார் இல்லையெனலாம்.

கல்விச் சாலைகளில் ஏழைப்பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் உதவவோ உணவளிக்கவோ வேண்டுமானால் எல்லா ஏழைப் பிள்ளைகட்கும் உதவ முன்வர வேண்டும். இதற்குச் சிபாரிசு பெரிதும் வேண்டியிருக்கிறது. சிபாரிசு இல்லாத ஏழைப்பிள்ளைகள் மேற்கூறியவற்றைப் பெரும்பாலும் பெறுவதில்லை. இவ்விஷயத்திலும் வஞ்சமுஞ் சிபாரிசும் வேண்டுமா? ஏழை மக்களிற் சிலர் நாணமுள்ளவராயிருப்பர். அவர்கள் தங்கள் நாணத்தை யடக்கித் தங்கள் வேண்டுகோளை முறையிடுமுன், அப்பிரபு இதற்குச் சிபாரிசு செய்யலாமா செய்யக்கூடாதா என்று சந்தேகிக்க இடந்தராமல், அவ்வேழைக்குத் தெரிந்தவராகவும் பிரபுவுக்குத் தெரிந்தவராகவும் இருக்கிற ஒரு பிரபுவைத் தேடவேண்டியிருக்கிறது. அங்ஙனம் தெரிந்தில்லாத ஏழையின்பாடு திண்டாட்டந்தான். இவ்விதம் ஒருவித உதவியும் இல்லாமையால் வருந்தி வாசிக்க இயலாது கிடக்கும் ஏழை மக்கள் பலரை நாம் காண்கிறோம். இவ்வேழைமக்களைச் செல்வர்கள் தேடிக் கண்டுபிடித்து உண்டியும் உடையுங் கொடுத்துக் கல்வி புகட்டுவிக்க வேண்டும். இதுவே முதற்கடமையாக அறிவாளிகள் கொள்ள வேண்டியதாம்.

மந்திர மன்றங்களில் அமரும் அங்கத்தினர்கள் இவை போன்று ஏழைக் குடிகட்கும் பயன்படும் விதிகளை முதன் முதலறிந்து நிலைபெறச் செய்யவேண்டும். தேர்தலுக்கு முன் குடிகளுக்குக் காட்டும் அன்பு தேர்தலுக்குப் பின் இருக்க வேண்டாமோ?

ஆகையால், மக்கட் பேற்றையடைய விரும்பும் ஒவ்வொருவரும் தாம் உலகுக்கு உழைக்கவே பிறந்தவர்களாகவே எண்ணவேண்டும். உலகு நமக்காக உள்ளது, நாம் யாவராலும் உதவப் பெறல்வேண்டும். நாம் பிறருக்கு உதவிபுரியலாகாது என்னும் எண்ணம் உள்ளவன் நடை பிணமாவான்; உலகில் ஒருதவியும் புரியமுன் வராதவன் உலகிற்குப் பெரும் பொறையாவான். தனக்கு ஒருவன் நன்மை புரிதலை விரும்புதலில்லாமை பெரு வியப்பே! உலகில், "இவன் நமக்கு நண்பன்," "இவன் நமக்கு அயலான்", "இவன் பகையாளன்" என்னும் எண்ணம் இல்லாதவனே மக்களில் தலையாயான்.

> "தத்தமக்குக் கொண்ட குறியே தவமல்ல
> செத்துக சாந்து படுக்க மன்னெறத்துச்
> சமத்தனாய் நின்றொழுகுஞ் சால்பு தவமே
> நுகத்துப் பகலாணி போன்று."

என்பது தமிழ் வேதவாக்கு.

இது பழமொழி நூலிற் கண்டது. அதாவது, "மக்கட்குத் தத்தங் கொள்கைக்காகக் கொண்டுள்ள அடையாளமே (சைவ வைணவ மதத்தினர் கொண்டுள்ள திருநீறணிதல் திருமண்ணணிதல் போல்வன) தவமென்று சொல்லப்படுவதல்ல. ஒருவன் தன் உடலின் ஒருபக்கம் வாய்ச்சிகொண்டு செத்தட்டும்; ஒருவன் மற்றொருபக்கம் சந்தனங்கொண்டு குளிர அப்பட்டும். (இருவரும் இத்தன்மையராயினும் ஒருவர்பாற்கோடாது) இருவரிடத்திலும்சம அன்புடையனாய் நின்றொழுகுஞ்சால்பே தவமானது, நுகத்தடியின் நடுவில் அடிக்கப்பட்ட ஆணி ஒருபாற் கோடாது நடுவில்நிற்பதுபோல" என்பதாம்.

ஆதலின், மக்களாற் கொள்ளப்படுவனவற்றில் முதன்மையாவது நடுவு நிலைமையாம். ஒவ்வொருவரிடமும் இன்சொற் சொல்லுதற் பழக்கம்வேண்டும்; அவ்வின்சொல்லும் உள்ளம் ஒத்ததாகவேண்டும். ஒவ்வொருவரும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வேண்டும். தனக்கு நன்மையென வேண்டுமவையே பிறர்க்கும் நன்மையாகவேண்டும் என்றுள்ள உயர்ந்த எண்ணம் வேண்டும். உலகெங்கும் உயர்ந்த கடமை பெருக எல்லாம் வல்ல முருகன் திருவடிகளை யிறைஞ்சுதும்.

ஜ. இராஜு முதலியார்

(தமிழ்ப் பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், பூவிருந்தவல்லி)



குந்த மரபினர் மாத்திரம் உட்சண்டைகளிலும், அற்பவேற்றுமைகளிலும், காலத்தையும், எண்ணத்தையும், புத்தியையும் விரயஞ் செய்து சோம்பிக்கொண்டும் தூங்கிக்கொண்டும் இருத்தல் பரிதபிக்கத்தக்க அறியாமையின் பயனேயாம். அது மாத்திரமேயல்ல, தற்கொலை செய்துகொள்ளுபவனுக்கு என்ன தண்டனை கடவுளால் விதிக்கப்பட்டிருக்கிறதோ, அதைப் பெற நாம் அருகர்களாவோம்! உலகமாறுதலுக்கு ஏற்றதாக, அதன் வேகத்துக்கு ஏற்றதாக, நாமும் நமது ஆசாரங்களையும், நடையுடை பாவனைகளையும், நாகரீகத்தையும் சீர்திருத்திக்கொண்டு உலக மாந்தரின் பெரிய போட்டியில் ஐக்கியமாயும் ஆண்மையாயும் நிற்கவேண்டும். மற்றவர்களைவிட நாம் பின்அறையில் சோர்ந்து நின்றுபோவோமானால், நம்மை மிதித்துக்கொண்டு நமக்குப் பின் வருபவர் முந்திப்போகவும் நாம் ஏமாற்றத்தையும் அபஜயத்தையும் அடைய வேண்டியதாகும்!

ஒன்றுபட்டால் வாழ்வோம் இன்றேல் வீழ்வோம்! எச்சரிக்கை!! செங்குந்த மரபினர்களாகிய சகோதரரே, விழித்தெழும்புங்கள்!!!

சோளிங்கபுரம்.
17—11—27.

இப்படிக்கு,
இல. முனியப்ப முதலியார்.

---

## சந்தனக்காப்பு அலங்கார வைபவம்.

சென்னை சைதாப்பேட்டை செங்குந்தர் கோட்டத்தின்கண் வேணவரமளிக்க வீற்றிரா நின்ற ஸ்ரீ வள்ளி தேவஸேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியாருக்கு நிகழும் பிரபவஹூ கார்த்திகைமாதம் 17-ந் தேதி சுக்கிரவாரம் (2-12-27) பகல் 12 மணிக்கு அபிஷேகமும், மாலை 5-மணிக்கு மேல் மேளக்கச்சேரியும், 7-மணிக்குமேல் திருப்புகழ் பாராயணமும், 9-மணிக்குச் சந்தனக் காப்பு அலங்கார தெரிசனமும், சோட சோபசார தீப ஆராதனையும், மறுநாள் சனிவாரம் (3-12-27) காலை 7-மணிக்கு விஸ்வரூபதெரிசனமும், பகல் 12-மணிக்கு மேல் மகா அபிஷேகமும், சோடசோபசார தீப ஆராதனையும, எண்ணிறந்த பக்தகோடிகள் புடைசூழ வெகு சிறப்பாக நடந்தேறின.

ஸ்ரீசுப்பிரமணிய திருப்புகழ் சபையினர், சைதாப்பேட்டை.

## கொங்குநாட்டு உண்மைச் செங்குந்தரும் பொட்டுக் கட்டுவோரும்.

பொட்டுக் கட்டுவோர்களுக்கும் உண்மைச் செங்குந்தர்களுக்கும் தோன்றியிருக்கும் மறுப்புக்கள் கொங்குநாட்டில் புதிதன்று. சில்லாண்டுகளுக்கு முன்னர் ஈரோடு பிரிவு புன்செய் வுளத்துக்குளி உண்மைச் செங்குந்தர் உயர்திருவாளர் மொ. க. குழந்தையப்ப முதலியாருக்கும் பொட்டுக்கட்டுவோர் சிலருக்கும் ஒருபெரு வழக்கு அரசிறை நீதிமன்றம் வரைச் சென்று நிகழ்ந்தது. இதில் பொட்டுக்கட்டுவோரும் தாங்கள் செங்குந்த முதலியாரென்பதை வழக்கிட்டுத் தங்களை உண்மைச் செங்குந்தரென்று சொல்லுவதற்குப் பொய்யே உருவெடுத்த ஓர் பெரியாரைக் காஞ்சி நாட்டுப்பக்கமிருந்து சிறப்புடன் அழைத்து வந்தனர். இப்பெரியார் அரசிறை உயர்மன்றப் பெயரிட்டுப் பொய்யேடு கொண்டுவந்து காட்டியது காரணமாக அரசினர் சிறை விடுதிக்குப் பேருதப்பினராயினர். இச்செய்தி இந்நாட்டிலுள்ள யாவரும் நன்கறிவர்.

இதனால், ஒவ்வொரு ஊரிலுள்ள உண்மைச்செங்குந்தர்களுக்கும் பொட்டுக் கட்டுவோர்களுக்கும் சிறு சண்டைகளுண்டாகி, பொட்டுக்கட்டுவோர் நம்மவர்களுடைய சிறப்புக் காரியங்களுக்குப் பாம்பொலிக்குழலும் (நாகசுரமும்) இதற்கியைந்த முழவு (டவுல்) முதலியன ஊதவும் அடிக்கவும் கூடாதெனத் தடை செய்தனர். சென்னிமலை, சிவகிரி முதலான சில இடங்களில் இத்தடைகள் சிறிது ஊக்கத்துடன் நின்றுவிட்டன.

பின்னர் இவ்வாறு ஏற்பட்ட தடையானது சில வறுமைமிக்க வாத்தியக்காரரால் மறுக்கப்பட்டு உருவழிந்து போயிற்று. பெரும் பகுதியினர் ஏழைகளானமையின் இக்கொள்கை நிறுவமுடியாமல் முயற்சி குன்றினர். இவ்வாறு நம்மவர்கள் வீடுகளுக்கு வசாமலிருந்தவர்கள் வருகின்ற பழக்கம் மிக்கதின் காரணமாக இவர்களுக்கும் நம்மவர் சிலருக்கும் சிறிது நட்புமிக்கது. இந்நட்பு,

"நெல்லினுமி சிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினுந் திண்மைநிலை போம்"

என்ற முறைப்படியில்லாமல், 'பிரிந்தவர் கூடிடில் பேசவும் வேண்டுமோ' என்றவாறாயிற்று.

இவர்கள் பின்னும் செங்குந்தரென்று சொல்லப் புகுந்தமையைச் சிறிதெழுதுகிறேன். பொட்டுக்கட்டுவோர் அழகிய இளம் பெண்களுக்குப் பொட்டுக்கட்டுவதும், அழகின்மையாயிருந்தால் பொட்டுக் கட்டுவோர்களுக்குள் பிறந்த ஆடவர்களுக்கோ, அப்பரம்பரையிலுள்ள குழலூதுவாருக்கோ வேறு தொழில் செய்வாருக்கோ, அல்லது உண்மை வேளாளரிலோ கைக்கோளரிலோ



குடியிலிருந்து ஒதுக்கப்பட்டுக் குலவுரிமையிழந்தவர்களுக்கோ, நல்லன்புகாட்டித் திருமணம் செய்வது வழக்கமாகக் காணப்படுகிறது.

இவ்வகுப்பினரில் பெரும்பாலும் ஆடவர்கள் மணம் செய்து கொண்டு பாம்பொலிக்குழல் (நாகசுரம்) இதற்கியைந்த முழவு (டவுல்) முதலியன ஊதியும் அடித்தும் வாழ்கின்றார்கள். இத்தொழிலை எந்த உண்மைச் செங்குந்தரேனும் மேற்கொண்டதாக எங்கும் எப்பொழுதும் யான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

இப்படி வாழ்ந்து வருவோர் நாளடைவில் சிறிது செல்வராயின் இத்தொழிலை இழிவெனக் கருதித் தங்கள் வழித்தோன்றல்களை உத்தியோகம், பண்டமாற்றுதல், உழவு, நெசவு முதலிய வேறு துறைகளில் பயிற்றிப் பொருளீட்டுகிறார்கள். குழலூதலையும் பொட்டுக்கட்டுதலையும் அறவே நீக்கிச் சிறிதுயர்வடைந்தவர்கள், தங்களில்லங்களில் நடக்கும் திருமணம் முதலிய சிறப்புக் காரியங்களுக்குச் சில உண்மை வேளாளர்களையும் செங்குந்தர்களையும் நட்பினாலோ பணங்கொடுத்தோ அழைத்துச் செல்வார்கள்.

இப்படிப்போய் பணத்துக் காசைப்பட்டுப் பல்லைக்காட்டும் மக்களின் அறிவின்மை என்னே! இவ்வளவும் கல்வியின்மையால் உண்டாயதென்பதை மட்டும் ஒவ்வொருவரும் நினைவில் பதித்தல் வேண்டும். இதைச் சிலர் தமது பிழைப்பாகவும் வைத்திருக்கின்றனர். இவர்களைப்பற்றி யெழுதுவது எழுதுகோலுக்கும் மனதிற்கும் இன்னலேயொழிய வேறில்லை. கோயம்புத்தூர்ஜில்லா ஈரோடு, பவானி, கோபிசெட்டி பாளையம் பிரிவுகளைச் சார்ந்த சிற்றூர்களில் வாழும் உண்மைச் செங்குந்தர்களை ஒருங்கு சேர்த்துக் கேட்டால் இதன் உண்மை நன்கு வெளியாகும்.

குலத்தைக் கெடுக்கவந்த இந்தக் கோடாரிக் காம்புகளைச் சிறிது நல்லறிவுள்ள யாராவது, "இது பொருந்தாக்காரியம்" எனக் கண்டித்தால், அவர்கள் 'உங்களுக்கு உலகநடை ஒன்றும் தெரியாது. நான் கருணீகர், வேளாளர், வன்னியர் முதலியோருடைய வீடுகளில் நடக்கும் சிறப்புக் காரியங்களுக்கு நட்புரிமை பாராட்டிப் போவதுபோலச் சென்றேனேயொழிய வேறில்லை. அங்கு பார்ப்பனரோ அல்லது சைவர்களோ சமையல் செய்தனர். எனக்கும் சில வேளாளர்களுக்கும் சிறப்பான ஓரிடத்தில் தனிமையாகப் பரிமாறினர்' எனக் கூறிக் கேட்டவர்க்குச் சமாதானஞ் சொல்ல முயற்சிப்பார்கள்.

நிற்க, உயர்வடைந்து பொட்டுக்கட்டுதலையும், மேளம் வாசித்தலையும்விட்டுத் திருமணம் நிகழ்த்திய செல்வர்களிருக்கின்றார்களே, இவர்கள் யாதுசொல்லுவரெனில், " 'மாமா' பெரிதனக்கார...... ......முதலியார் வந்திருந்தார்! 'பெரியப்பா' நாட்டாண்மை

கார.........முதலியார் வந்திருந்தார் !" என்று வந்திருந்தவர்களோடு வராத பல உண்மைச் செங்குந்தர் பெயர்களையும் கூட்டிச் சொல்லித் தம் உண்மை வரலாறு தெரியாத வேற்றூர்க்காரரிடம் மேலே சொன்ன உண்மைச் செங்குந்தரெல்லாம் தமக்கு நெருங்கிய உறவினரென நம்பிக்கை யுண்டாகும்படி பொய்ச்சாலங்காட்டி மகிழ்வுறுவார்கள்.

இச் செய்கைகளெல்லாம் ஏழைமக்களாலியலாது; பணக்காரர்கள் திருவிளையாடலாகும். உயர்திருவாளர் மொ. க. குழந்தையப்ப முதலியார் போன்ற வண்மைமிக்க நம் குலப் பெரியார்கள் இவற்றைச் செவியேற்றுத் தாங்கள் முன்செய்த அரும்பெருங் காரியமெல்லாம் நீர்மேலெழுத்தாயதென நினைந்து உண்ணாநோன்பு நோற்று முருகப் பெருமானைக் குறைகூறிக் கொள்வார்கள்.

கோவைச் சங்கக் காரியதரிசியின் கடிதமெனப் பெயர்பூண்டு 'மித்திரன்' ௧௦-ம் பகுதியில் வெளியான கட்டுரையில் "சாதாரண உலகவிவகார வகையில் எழுதப்பட்ட ஆஸ்தியைப்பற்றிய தஸ்தாவேஜுகளே இதற்குத் தக்க சான்றாகும்" என வரைந்திருந்தது காரணமாகச் சில எழுத வேண்டுகின்றேன். அரசினர் பதிவிடங்களில (ரிஜிஸ்ட்ரார் ஆபீஸுகளில்) நாம் எப்படிச் சொல்லுகின்றோமோ அப்படிப் பதிவுசெய்கிறார்கள். இவ்வுத்தியோகஸ்தர்களைப் பத்திரங்களைப் பதிவு செய்வதற்காக அரசினர் ஏற்படுத்தியுள்ளார்களேயொழிய, பதிவு செய்வோரின் வரலாறுகளையும் குடிப்பிறப்பின் உண்மைச் செய்திகளையும் ஆராயும் பொருட்டு வைத்தார்களில்லை. இக்கோவையார் சங்கம் தோற்றியதற்குப் பின் நட்டுவனர் என்னும் பட்ட முடையவரும் முதலியார், கைககோளர், சைவர், க்ஷத்திரியர், சேனைத்தலைவர், செங்குந்தர், தேவர், அமரர், தேவக்ஷத்திரியர் முதலாய பெயர்களை நதான் பதிவு செய்திருப்பார்கள். இதற்கு ஐயமென்ன? இந்த இருபதாண்டுகளுக்கு முன்னர் இப்பெயர்களை வரிசையாகக் காண்பதருமை. ஒருவகுப்பினர் சில காரணங்களால் மற்றொரு வகுப்பின் பெயரையும் சிறப்புப் பட்டங்களையும் வைத்துக்கொள்ள முயல்வதை நந்தமிழ் நாட்டில் இயல்பாகக் காண்கிறோம். ஒருவன் உயர்ந்த வகுப்பினரெனப் படுபவர்களால் மதிக்கப்பெற வேண்டுமென்னும் ஆவலாலோ, அல்லது தங்குடியினர் இழித்தொதுக்கிய காரணத்தாலோ, மற்றொரு வகுப்பில் புக முயற்சிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்,

எனவே, யான் மேலே காட்டியவற்றினின்றும் பெறக்கூடியது, இக் கொங்கு நாட்டு உண்மைச் செங்குந்தருக்கும் பொட்டுக் கட்டுவோர்களுக்கும், நட்புக்கிழமையாகப் போக்குவரவுகள் உண்டே யல்லாமல் வேறு யாதொரு தொடர்புங் கிடையாதென்பதேயாம்.



முடிவில், யான் உண்மைச் செங்குந்த பெருமக்களை அடியிற் குறிப்பிடும் கொள்கைகளை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்:—

(௧) கல்வி மிக்குடைய உண்மைச் செங்குந்த பெரியார்கள், நம்மவர்க்களுள்ள ஒவ்வொரு சிற்றூருக்கும் சென்று, நம்குலப் பெருமையை விரித்துரைத்துக் கல்வியில்லாத எளிய மக்களுக்கும் குலப்பற்றுண்டாகுமாறு செய்வது.

(௨) ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் பன்னிரண்டு ஆண்டுவரையாவது சைவ முறையாகப் படிப்பிப்பது.

(௩) பொட்டுக்கட்டுங் கொள்கையோரிடம் நட்புக்காரணமாகவுஞ் செல்லாதிருப்பது.

(௪) நம் இனத்தோரில் குற்றமிழைத்தோர்களைப் பெருஞ் சீற்றத்துடன் விலக்கிவிடாமல், அவர்கள் பால் அன்புகாட்டிச் சீர்திருத்திக் கொள்வது.

இங்ஙனம், நம் 'மித்திரன்' வாயிலாகக் கோவைச் சங்கத்தாருக்கு மறுப்புக்கள் விடுத்த பெரியார் கொள்கையைப் போற்றும்

இம்முடி குமாரசுவாமி, திருவையாறு.

---

## செங்குந்தர் கிளர்ச்சி

### குருவராஜப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்.

19-11-27 மாலை தாலுக்காபோர்டு பாடசாலையில் டிை குருவராஜப் பேட்டை கிராம வாசிகளின் சபை ஒன்று நடைபெற்றது.

ம-ா-ா-ஸ்ரீ போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் M. சிங்காரவேலு முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். இச்சங்கத்துக்குச் "செங்குந்த வாலிபர் சங்கம்" எனப் பெயரிடப்பட்டது.

உத்தேசம்:—1. செங்குந்த வாலிபர்களை இச்சங்கத்தில் சேர்த்துக் கல்வியையும் சுகாதாரங்களையும் விருத்திசெய்வித்தல். 2. புஸ்தகசாலை ஒன்று அமைத்தல். 3. பத்திரிகைகளை வரவழைத்து வாலிபர்களை வாசிக்கும்படி செய்வித்தல். 4. செங்குந்த வாலிபர்களைச் சங்கத்தில் மெம்பர்களாக்கி நல்லொழுக்கத்தில் பயிலுவித்தல். 5 இன்னும் பொது நன்மைக்கு வேண்டிய கிராம காரியங்களைச் செய்தல். 6. இந்தச் சங்கத்தைச் சென்னையில் ஸ்தாபித்துள்ள தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்துக்கு உபசங்கமாக ஸ்தாபித்தல்.

விதிகள்:—சிறுவர்கள் முதல் யாவர்களும் இந்தச் சங்கத்துக்கு
மெம்பர்களாகச் சேரலாம். மெம்பர்கள் ஒவ்வொருவரும் மாதம்
1-க்கு 0—1—0 (ஒரு அணு)க்குக் குறையாமல் சந்தா செலுத்த
வேண்டும். இன்றைய தினமே சங்கத்தில் மெம்பர்களாக 56 பே
சேர்க்கப்பட்டார்கள்.

இந்தச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள்:—

1. திரு. குட்டி சிதம்பர முதலியார் அவர்கள், தலைவர்.
2. திரு. கொ. தணிகாசல முதலியார் அவர்கள், காரியதரிசி
3. திரு. ச. மு. வரதப்பமுதலியார்அவர்கள், பொக்கிஷதார்
4. இதர கமிட்டி மெம்பர்கள்:—திரு. ச. மு. வீராசாமி முதலியார்
திரு. தொ. விநாயக முதலியார், திரு. காமப்ப முதலியார், திரு. ம. எ
மலை முதலியார், திரு. V. வஜ்ஜிரவேலு முதலியார் அவர்கள்.

## ரிஷிவந்தியம் செங்குந்தர்களின் கூட்டம்.

1927-ஹு நவம்பர்மீ 20-ஆம் நாள் ஆதிவாரம் மாலை (
மணிக்கு, காஞ்சிபுரம் மஹாநாட்டுக் குருஸ்வாமிகள் ஸ்ரீலஸ்ரீ கா
ச. ஸ்வாமிநாத தேசிகரவர்களின் அக்ராசனத்தின்கீழ் ரிஷிவ
தியம் போர்டு இந்து ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் திருவாள
B. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் செங்குந்தர்களின் பழை
வழக்கம், கல்வியறிவு, ஒழுக்கம், காருண்யம் முதலிய நற்குணங்
களைக் குறித்துச் சுமார் ஒருமணி நேரம் உரையாடினார்.

அவைத்தலைவர் கீழ்க்கண்டவாறு உபந்நியசித்தனர்:—

பண்டைக்காலத்தில் நம்மரபினர் கல்வியில் தேர்ந்த பண்டி
தர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், படைவீரர்களாகவும்
சேனைத் தலைவர்களாகவும், பெரும் புலவர்களாகவும் மிகச் சிற
புடன் வாழ்ந்து வந்தவற்றை விளக்கி, இச்சங்கத்திற்கு ஊக்க
தையும் உணர்ச்சியையும் தரும்படி முதலியாரவர்கள் உரையாடி
னது போற்றத் தகுந்தது என்றும், தற்காலம் செங்குந்த
கட்குத் தாழ்ச்சியை யுண்டுபண்ண வேண்டுமென்று சில
போலிகள் பகீரதப்பிரயத்தனஞ் செய்து வருகிறார்கள் என்றும்
அது எக்காலத்தும் பயனைத் தராதென்றும், இத்தியாதி
ஈன நடத்தையைக் கண்டிக்க நம் 'செங்குந்த மித்திரன்
ஆங்காங்கு சென்று போதித்து நற்புத்தி புகட்டிவரு
தையும்' நம் மரபினர் அனைவரும் நம்மித்திரனை ஆதரிக்க வேண்டு
மெனவும், ஆதியில் தாருகன், சிங்கன், சூரபன்மன் முதலிய அ
ணர்களை அடக்கியாண்ட அறுமுகன் அருளைப்பெற்ற தென்னி
திய செங்குந்த மஹாஜனசங்கமும் அதன் அமைச்சர்களும் கிளை
சங்கங்களும் இதில் மிகத் தீவிரமாயிருப்பதாலும், மாணவர் ச
கங்களும் ஆங்காங்கு குமுமி வலியுறுத்துவதாலும், நாம் உறக்க
திலிருந்து விழித்துக் கொள்ளுங்காலம் நேர்ந்ததுபற்றி முழுமுத



கடவுளை நாம் துதி செய்யவேண்டுமெனவும், மற்றும் நம்மரபினர் முன்வரத் தகுந்த அரிய விஷயங்களைப் பற்றியும் உரையாடினார். அக்ராசனருக்கு நன்றியும் வந்தனமும் வழங்கி இரவு 9-மணிக்கு ராஜவாழ்த்தோடு நம் சங்கம் நீடு பெற்றுழைத்து வருமாறு நம் குலதெய்வமாகிய அறுமுகக் கடவுளைத் துதித்துக் கூட்டம் இனிது கலைந்தது.

## சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

1927ஹு நவம்பர்மீ 11உ வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்குச் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் காரியாலயத்தில் மேற்கூறிய வாலிபர் சங்கத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம்கூடிற்று. அக்கூட்டத்திற்கு ஷை சங்கத் தலைவர் ஸ்ரீமான் M. சண்முக சுந்தர முதலியார் M.A.,L.T., அவர்கள் தலைமை வகித்தனர்.

கடவுள் வாழ்த்து நிகழ்ந்தபின் தலைவர் சைதாப்பேட்டை ஸ்ரீமான் S. ரத்தினவேலு முதலியார் அவர்கள் அவ்வூர் முனிசிபாலிடியில் வைஸ்சேர்மன் பதவி பெற்றதற்கும், காஞ்சீபுரம் பிள்ளையார்பாளையம் ஸ்ரீமான் சு.வினைதீர்த்தான்முதலியார் அவர்கள்செங்குந்த வாலிபர் சங்கத்தின் உதவியால் அவ்வூர் நகரபரிபாலன சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டமைபற்றியும், அவர்களுக்கு இச்சங்கத்தின் பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதாகவும், காஞ்சி செங்குந்த வாலிபர் குலாபிமானத்திற்கும் அவர்கள் நுண்ணறிவான் தெரிந்துசெய்த அரிய முயற்சிக்கும் இச்சங்கத்தின் சார்பில் நன்றி பாராட்டுவதாகவும் ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். அது யாவராலும் ஒருங்கே ஒப்புக்கொள்ளப் பெற்று ஏகமனதாய் நிறைவேறிற்று.

பிறகு ஸ்ரீமான் வி. சங்கர சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள் 'செங்குந்த வாலிபர் கடமை' என்பதுபற்றி ஓர் அரிய சொற்பொழிவை இனிது நிகழ்த்தினர். அவர் பின் அதே விஷயத்தைப்பற்றிப் பல மாணவர்கள் உபந்நியாசித்தனர்.

இறுதியில் வந்தனோபசாரம் கூறப்பெற்று இரவு 8 மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது.

இவ்வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த செங்குந்த வாலிபர்கள் சோளிங்கபுரத்திற்கு வேடிக்கைக் கூட்டமாகச் செல்லுதல் வேண்டும் என்று இச்சங்க நிர்வாகத்தினர் தீர்மானித்திருக்கின்றனர்.

குறிப்பு:—இவ்வாலிபர் சங்கத்தின் சார்பில் அடுத்து நிகழக்கடவதான பொதுக்கூட்டத்தை 8-1-28 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்குக் கூட்டவும், சோளிங்கபுரத்திற்கு வேடிக்கைக்

கூட்டமாகச் சென்று வருவதற்குரிய விவரங்களும் அப்பொழுதே தீர்மானிக்க வேண்டும் என்றும் டிை சங்கத்தின் நிர்வாக சபையில் 2-12-27ல் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன.

### திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்.

20-11-27-ந் தேதி ஞாயிற்று கிழமை காலை 7½ மணிக்குத் திருமயிலை செங்குந்தர் வாலிபர் சங்கத்தின் நிர்வாகசபை கூடிற்று. அச்சபையில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது:—

திருமயிலை செங்குந்தர் வாலிபர் சங்கத்தின் நிர்வாகசபை, ஸ்ரீமான் எஸ். இரத்தினவேலு முதலியார் அவர்கள் சைதாப்பேட்டை முனிசிபல் கவுன்சிலில் வைஸ் சேர்மனாக நியமிக்கப் பெற்றதைப்பற்றித் தங்கள் மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

### குண்ணகம்பூண்டி புதூர் செங்குந்தர் கூட்டம்.

9-12-27-யில் வந்தவாசி தாலுக்கா குண்ணகம்பூண்டி புதூர் என்னும் கிராமத்தில் வரசித்தி விநாயகர் ஆலயத்தில் டிையூர் திருவாளர் வீரபெருமாள் முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் செங்குந்த குலமக்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது.

ஆரம்பிக்குமுன் டிையூர் தேவார கோஷ்டியார்களால் இன்னிசைக் கருவிகளுடன் தமிழ்மறை ஓதப்பெற்றுப் பிறகு மானம்பதி திருவாளர் S. ஆறுமுக முதலியார் அவர்களால் 'செங்குந்தர் முன்னேற்றம்' என்னும் விஷயத்தைப்பற்றி மிகவும் தெளிவாக விரிவுரை ஒன்று நிகழ்ந்தபின், திரு. குப்புசாமி முதலியார் அவர்களால் வாழ்த்துக் கூறப்பட்டு நவீன ஊக்கத்துடன் கூட்டம் கலைந்தது.

அவ்வமயம் கூட்டத்துக்கு வந்திருந்த ஆண்பெண் இருபாலர்களும் குன்றா ஊக்கத்துடன் கவனித்து இருந்தது பாராட்டத் தக்கது. அப்பொழுதே சுமார் 20 சந்தாதார்கள்நமது 'மித்திர'னுக்குச் சேர்ந்ததோடு சில சந்தாதார்கள் அப்பொழுதே சந்தா தொகையையும் செலுத்திவிட்டது போற்றத்தக்கதாகும். டிையூர் பிரபல மளிகை வியாபாரியான திருவாளர் வீரபெருமாள் முதலியார் அவர்கள் தாமாக முன்வந்து தலைச்சங்கத்திலிருந்து உண்டியொன்று அனுப்பும்படி விருப்பத்துடன் வேண்டிக்கொண்டார். தருமசிந்தையுடையவரும் சமூக முன்னேற்றத்துக்கு அருந்தொண்டாற்றுபவருமாகிய திரு. தங்கவேலு முதலியார் அவர்கள் தலைச்சங்கத்தின் தலைவர்களை ஆங்கு விஜயம் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். இப்பெரியாரது குலாபிமானம் மிகவும் போற்றத்தக்கதாகும்.



## தலைச்சங்கத்தின் பிரசாரம்.

### கருங்குழி மேலவலம்பேட்டை.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியாரும், பி. செ. மாணிக்கவாசக முதலியாரும் 12-11-27ல் கருங்குழி மேலவலம் பேட்டைக்குச் சென்று திரு. S. சாம்பசிவ முதலியார் அவர்களில்லத்திற் றங்கியிருந்தனர். அவ்வூர்ப் பிரமுகர்களின் வேண்டுகோளின்படி அன்று மாலை 5 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அச்சமயம் திரு. கனகசபை முதலியார் அவர்கள் தலைமை வகிக்கத் திரு. தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தகுல முன்னேற்றம்" என்பதைப் பற்றியும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் "நமது பண்டைய புகழும் தற்கால நிலைமையும்" என்பதைப்பற்றியும் 4 மணி நேரம் கல்லும் கரையுமாறு அரிய உபந்யாசங்கள் செய்தனர். இரவு 10 மணிக்குக் கூட்டம் கலைந்தது. கூட்டத்திற்குச் சுமார் 200 செங்குந்த சகோதரர்கள் வந்திருந்தனர்.

மறுநாள் காலை 7 மணிக்கு அவ்வூர் ஸ்ரீ முருகப்பெருமான் ஆலயத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அப்போது திரு. தி. அ. சண்முக முதலியார் அவ்வூரில் ஒரு தேவாரசபையும், ஒரு கிளைச் சங்கமும் இருத்தல் அவசியமென விளக்கமாக எடுத்துரைத்தனர். அதன்பயனாக ஒரு தேவார சபையும், செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம் என்னும் பெயர்பூண்ட ஒரு கிளைச்சங்கமும் நிறுவப்பெற்றன. தலைவர், திரு வெ. வேதகிரி முதலியார். துணைத்தலைவர், திரு. அ. வேதாசல முதலியார், காரியதரிசிகள். திரு. எஸ். சாம்பசிவ முதலியார். திரு. மலாலிப்பேட்டை M. நடேச முதலியார். பொக்கிஷதார், திரு. வி. ந. ஏகாம்பர முதலியார், நிர்வாக அங்கத்தினர்கள் திருவாளர்கள் சி. ந. சிங்காரவேலு முதலியார் வி. கு. முருகேச முதலியார். கு. சி. சுப்பராய முதலியார். க. வடிவேல் முதலியார், க. முத்துமாணிக்க முதலியார், அ. தருமலிங்க முதலியார். சி. ந. தாண்டவராய முதலியார். செ. முனுசாமி முதலியார். பா வடிவேல் முருக முதலியார் வீ. சு. ராமசாமி முதலியார். வி. ந. முத்து கன்னியப்ப முதலியார் கு. சுப்பராய முதலியார். வே. முத்துச்சாமி முதலியார். ஆ. வேலாயுத முதலியார், சுப்பராய முதலியார்.

23 கனவான்கள் மித்திரனுக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர்.

### கருங்குழிச் செங்குந்தர் பேட்டை.

அன்று மாலை 5 மணிக்குக் கருங்குழிச் செங்குந்தர் பேட்டையில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அதுபோது திரு. முருகப்ப முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்த் திரு. தி. அ. சண்முக முதலியார் "நமது குலசரித்திரத்தை"ப்பற்றி 2 மணிநேரம்பேசி கிளைச்சங்கத்தின் அவசியத்தையும் அதன் பயனையும் எடுத்துக் காட்டினர். அங்ஙனே ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது

தலைவர், திரு. மு. பாலசுந்தர முதலியார். துணைத்தலைவர், திரு. ரா. சொக்கலிங்க முதலியார். காரியதரிசிகள் திரு. எ. குள்ளப்ப முதலியார். திரு. கே. வேதாசல முதலியார். பொக்கிஷதார் திரு. அ. மாணிக்க முதலியார், நிர்வாக அங்கத்தினர்கள் திருவாளர்கள். சு. ராஜரத்தின முதலியார். மா. நடேச முதலியார். ந. பாலசுப்பிரமணிய முதலியார். வீ. மாணிக்க முதலியார். வீ. வேலாயுத முதலியார். பொ. கணேச முதலியார். மு. போரூரா முதலியார்.

20 குலாபிமானிகள் நமது 'மித்திரனு'க்குச் சந்தா நேயர்களாகவும் சேர்ந்தார்கள். பிரதி அமாவாசையிலும் கூட்டங் கூட்ட வேண்டியதென தீர்மானிக்கப்பட்டது. தலைச்சங்கத்திற்கு வருடத்திற்கு இவ்வளவு செலுத்துவதென்பதை அடுத்த கூட்டத்தில் முடிவு செய்வதாகவும் தீர்மானஞ் செய்த பிறகு வந்தனோபசாரத்தோடு பிரசாரகர்களுக்கு மாலைகளுஞ் சூட்டப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

அன்று இரவே திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் காஞ்சிபுரத்திற்குப் பிரயாணப்பட்டார்.

## மலாலிப்பேட்டை, சாரம்.

மறுநாள் காலை திரு. தி. அ. சண்முக முதலியார் மலாலிப்பேட்டைக்குச் சென்று சில சந்தாநேயர்களைச் சேர்ந்துக்கொண்டு மாலை சாரம்என்னும் கிராமத்திற்குச் சென்று இரவு 8 மணிக்குக் கூடிய கூட்டத்தில் "நமது குலமும் முருகனும்" என்பதைப் பற்றி உபந்யசித்தனர்.

## சின்னதச்சூர்

மறுநாள் சின்னதச்சூருக்குப் போகும் வழியில் அவ்வூர்ப் பிரபல வியாபாரியும் குலாபிமானியுமாகிய திரு A. துரைசாமி முதலியார் அவர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று அன்றிரவு 9-மணிக்கு திரு, A. துரைசாமிமுதலியார் தெம்பேர் கிராம முனிசிப்பு அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில், திரு. தி. அ. சண்முக முதலியார் "நமது அறியாமை" என்னும் விஷயத்தைப் பற்றி நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அச்சமயம் 25 சகோதரர்கள் நமது 'மித்திரனு'க்குச் சந்தாநேயர்களாகச் சேர்ந்தார்கள் இக்கூட்டத்திற்குச் சுமார் 300 செங்குந்த மக்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

## தெம்பேர்.

அடுத்தநாள் நமது சங்கப் பிரதிநிதி அவ்வூரிலுள்ள சில பெரியோர்களுடன் புதுப்பாளையத்திற்குச் சென்று பெரிய வியாபாரிகளும் பெருந்தனிகர்களுமான திருவாளர்கள் ஆ. சு. வைத்திலிங்க முதலியார், கு. சின்னசாமி முதலியார், அ. மு. கிருஷ்ணசாமி முதலியார், முதலியவர்களால் அன்புடன் வரவேற்கப் பெற்றனர். மாலை 4-மணிக்கு அவ்வூரிலுள்ள பெரியோர்களுடனும் தச்சூரிலிருந்து வந்திருந்த நண்பர்களுடனும் தெம்பேர் என்னும் கிராமத்திற்குச்சென்று அங்கு கூடிய பொதுக்கூட்டத்தில் 'நமது குலதர்மம்' என்பதைப்பற்றி ஒரு அரிய சொற்பெருக்கு நிகழ்த்தி அங்கு குழுமியிருந்த செங்குந்தர்களுக்கு ஊக்கத்தை யுண்டாக்கினார். அச்சமயம் மித்திரனுக்கு 25 சந்தா நண்பர்கள் சேர்ந்தார்கள்.



## புதுப்பாளையம்.

நமது பிரதிநிதியாகிய முதலியாரவர்கள் குல நண்பர்களோடு திரும்பவும் புதுப்பாளையத்திற்கு வந்து இரவு 9-மணிக்கு அங்கு கூடிய பொதுக்கூட்டத்தில், திரு ஆ. சு. வயித்திலிங்க முதலியார் முதலிய சிவநேயச் செல்வர்களால் தேவாரம் ஓதப்பெற்ற பிறகு 'செங்குந்த குலமும் தேவாரமும் சங்கமும்' என்னும் விடயத்தைப்பற்றி சுமார்3-மணிநேரம் அரியதோர் உபந்யாசஞ் செய்தார். 20 அன்பர்கள் 'மித்திரனு'க்குச் சந்தாதாரராகச் சேர்ந்தார்கள். இக்கூட்டத்திற்கு 400-க்கு மேற்பட்ட செங்குந்த சகோதரர்களும் மற்ற இனத்துக் கனவான்களும் வந்திருந்தார்கள். இரவு 1 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

## கல்லாலம்பூண்டி.

மறுதினம் திரு. தி. அ. சண்முக முதலியார், தமது வியாபார அலுவலையும் பொருட்படுத்தாது குலத்தொண்டே பெருந்தொண்டென மதித்த திருவாளர் ஆ. சு. வயித்தியலிங்க முதலியார் அவர்களுடன் கல்லாலம்பூண்டி என்னும் ஊருக்குச் சென்று, நம் குலத் தலைவருள் ஒருவரும் டிஸ்ரிக் போர்டு மெம்பரும், பேருபகாரியும், சிறந்த குலாபிமானியும், செல்வச் சீமானுமாகிய உயர் திருவாளர் பொ. வெ. மு. முனிசாமி முதலியார் அவர்களாலும் அவரது சகோதரர் திரு. பொ. பொன்னுசாமி முதலியாரவர்களாலும் அன்புடன் வரவேற்று உபசரிக்கப்பெற்று, மறுநாள் மாலை 6மணிக்குத் திரு. முத்துக்குமார முதலியார் வீட்டிற்கெதிரில் அமைக்கப் பெற்றுள்ள கொட்டகையில் உயர் திரு. பொ. வெ. மு. முனிசாமிமுதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய பொதுக்கூட்டத்தில் 'நமது குலப்பெரியார்களது சரித்திர உண்மைகளை'ப்பற்றி 2 மணிநேரம் விரிவுரை செய்தனர். பிறகு தலைவரவர்கள் தமது பின்னுரையில் 'நமது குலத்தின் க்ஷேமத்திற்கெனவே உதித்து, தூங்கும் நம்மைத் தட்டியெழுப்பும் 'செங்குந்த மித்திரனா'கிய செல்வக் குழவியை நம்மூரிலுள்ள ஒவ்வொருவரும் தவறாது ஆதரிக்கவேண்டும். இல்லையாயின் நமது குலத்திற்குரிய 'முதலியார்' என்னும் பட்டத்தை இழந்தவர்களாவோம்' என வற்புறுத்தி 63 சகோதரர்களை மித்திரனுக்குச் சந்தாநேயர்களாகச் சேரும்படிச் செய்ததன்றிச்சந்தா தொகையையும் அப்போதே செலுத்தும்படியும் செய்தார். அன்றி

யும் தாம் நமது தலைச்சங்கத்திற்குத் தொண்டுபூண்டு உழைக்க முற்பட்டுவிட்டதாகவும், புதுவை முதலிய இடங்களுக்குத் தாம் பிரசாரம் செய்யப் போகும்போது தலைச்சங்கத்தாரும் அவருடன் வர வேண்டுமென்றும், நமது பத்திரிகைக்கென ஒரு அச்சாபீசு இருத்தல் அவசியமென்றும், அதற்கு வேண்டிய பொருட்சகாயம் தாம் செய்யத்தயாரா யிருப்பதாகவும், தமது தேக அசௌக்கியத்தையும் கருதாது வெகுநேரம் உற்சாகத்துடன் பேசி முடித்தனர். இரவு 11 மணிக்குச் சபை இனிது முடிந்தது.

### கிடார்.

மறுநாள் சங்கப் பிரதிநிதியாகிய திரு. தி. அ. சண்முக முதலியார் உயர்திரு. பொ.வெ.மு. முனிசாமி முதலியார் அவர்கள் அன்புடனுதவிய வண்டியில், திருவாளர்கள் நா. குமரகுரு முதலியார், முருகானந்தமுதலியார் முதலியபிரமுகர்களோடு கிடார் என்னும் கிராமத்திற்குச் சென்று அவ்வூர் நாட்டாண்மைக்காரர்களைக் கண்டு பேசியதன் பயனாக நம்'மித்திரனு'க்கு 16 பேர் சந்தாநேயர்களாகச் சேர்ந்தார்கள்.

### கண்டாச்சிபுரம்.

பிறகு நமது பிரதிநிதி அன்றுமாலை கண்டாச்சி புரத்திற்குச் சென்று திரு.க.பொ. இராஜமாணிக்க முதலியார் அவர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று இரவு 9 மணிக்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் சபாநிலையத்தில் சைவசித்தாந்தசமாஜத்தின் ஆதரவில்கூடியபெருங் கூட்டத்தில் உயர்திரு. கவிராஜ அ. சண்முக முதலியார் உயர்திரு. வித்வான் வை. ச. இராமலிங்க முதலியார் முதலிய பெரியோர்கள் முன்னிலையில், "முருகன் அருட் குணமும் வள்ளிதிருமணமும்' என்னும் விஷயத்தைப் பற்றிக் கேட்டோர் மன முருகுமாறு அரியதோர் உபந்நியாசம் செய்தார். பிறகு திரு. வித்வான் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள் வந்தனோபசாரமளித்து உபந்யாசகருக்குப் பூமாலை சூட்டினர். இரவு இரண்டு மணிக்குச் சபை இனிது முடிந்தது. மறுநாள் காலையில் திருவாளர்கள், க. பொ. இராமலிங்க முதலியார், சிவப்பிரகாச முதலியார் அவர்கள் முயற்சியால் 16 பேர் 'மித்திரனு'க்குச் சந்தாநேயர்கள் ஆனார்கள். இங்கு ஒரு கிளைச் சங்கமும் நிறுவப்பெற்றது.

தலைவர் திருவாளர்கள் தாகு நாட்டாண்மை, கவிராஜ அ. சண்முக முதலியார்அவர்கள், துணைத்தலைவர். வை. ச. இராமலிங்கமுதலியார் அவர்கள், பொக்கிஷதார், க. பொ. இராஜமாணிக்க முதலியார் அவர்கள், அமைச்சர், தாகு. க. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், திரு. வா. கு. குப்புசாமி முதலியார் அவர்கள் நிருவாக மெம்பர்கள் திருவாளர்கள் தாகு- க. சோமசுந்தர முதலியார் அவர்கள், தாகு. ச. குப்புசாமி முதலியார் அவர்கள், தாகு. அ. நாராயணசாமி முதலியார் அவர்கள்," தாகு. அ. மாசிலாமணி முதலியார் அவர்கள், ம. மு. சுப்புராய முதலியார் அவர்கள், தாகு. சிவப்பிரகாச முதலியார் அவர்கள், க. க. சிங்கார வேலுமுதலியார் அவர்கள்,



21-11-27-ல்நமது சங்கப்பிரதிநிதி திரு. தி. அ. சண்முக முதலியார் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

நமது பிரதிநிதியை அன்புடன் வரவேற்று உபசரித்து நமது 'மித்திர'னுக்குச் சந்தாநேயர்களைச் சேர்த்துத் தந்ததன்றி ஆங்காங்கு கிளைச் சங்கங்கள் நிறுவ உதவி புரிந்த நங்குலப் பெருமக்களுக்குயாம் என்றும் மறவாத நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1928ஆம் ஜனவரி மாதம் எமது பிரதிநிதிகள் திருப்பத்தூர் குடியேற்றம், சேலம், ஈரோடு முதலிய இடங்களில் பிரசாரம் செய்வர். அவர்களை வரவேற்று வேண்டிய ஒத்தாசை செய்யுமாறு ஆங்காங்கேயுள்ள குலாபிமானிகளை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர்கள்.

---

## ஒரு திருமுகம்.

### எனது அன்பர்களுக்கு ஓர் உறுதிமொழி

அன்பர்களே, நமது 'செங்குந்த மித்திரன்' அநேக இடங்களில்தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குப் பல கிளைச் சங்கங்களை ஸ்தாபிக்கச் செய்தும், நமது செங்குந்த குலத்தினருக்கு உண்மை உணர்ச்சியை உண்டாக்கியும், இன்னும் அநேக சீர்திருத்தங்களைச் செய்வித்தும், "எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்" என்னும் முதுமொழியைத் தனது நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டு கல்வி கற்க விருப்பமுள்ள நமதுகுல எளிய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், உணவு வசதி, முதலிய பேருபகாரங்களைச் செய்யவும் முன் வந்திருக்கின்றான்.

'நமது சகோதரர்களில் அநேகர் சந்தா தொகையைச் செலுத்தாமலிருக்கிறார்கள். சஞ்சிகையை வி. பி. போஸ்ட்டில் அனுப்பினால் திருப்பிவிடுகிறார்கள். சாதாரண போஸ்ட்டில் அனுப்பினால் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவர்கள் வலியவந்த திருவை விலக்குவது என்னவெனில், நமது'மித்திரன்' வெளிவந்த காரணத்தையும் அதன் பிரயோசனத்தையும் செவ்வனவே இன்னும் உணரவில்லையெனக் கருதவேண்டியதா யிருக்கிறது. இனியாவது சந்தா தொகையை அனுப்பிவிடுவது சாலச் சிறந்ததாகும். ஒவ்வொரு கிராமங்களிலும் நம் குலத்தினர் இருப்பதை அறிந்து, தன்னை ஆதரிப்பார்கள் என்ற நோக்கத்தோடு பலதிங்கள்களாக வீடுகள் தோறும் வந்து விளையாடி வருகின்ற 'மித்திரன்' படித்துச் சந்தா

வென்னும் ஆகாரத்தைக்கேட்ட காலத்து, நீ என்னிடம் வரவேண்டாம் என்று மறுத்துக் கூறுவது குலாபிமானத்திற்குப் பொருத்தமுடையதா? நமது பொது நன்மைக்காக உள்ளன்புடன் பாடுபட்டு உழைக்கும் அறிவாளிகள் விருப்பத்துடன் சந்தாதொகையைச் செலுத்தும் நேயர்களைச் சேர்த்துத் தரவேண்டும். சகோதரர்களே, இவ்விளங்குழந்தையின்மீது கருணைகூர்ந்து சந்தா உணவை ஊட்டி நாளடைவில் விருத்திக்குக் கொண்டுவர இதை வாசிக்கும் அறிவாளிகள் கடமைப்பட்டிருப்பது போலவே, மற்றோரும் இவனை முன்னுக்குக்கொண்டு வரவேண்டும்.

நான் மேலைப் புவனகிரி முதலிய இடங்களில் சிலரைச் சந்தா நேயர்களாகச் சேர்க்கும் காலத்தில் 'செங்குந்தன்' முதலிய பத்திரிகைகள் முன்னர்த் தோன்றி மின்னலென மறைந்தன. ஆகவே எங்களுக்கு இப்பத்திரிகைகளில் நம்பிக்கையில்லை" என்றார்கள். அதற்கு நான் "அவை ஒரு தனிப்பட்ட குலாபிமானியால் பிரசுரிக்கப்பட்டு, நம்மவர் ஆதரவு நீடித்தில்லாததால் நிறுத்தப்பட்டன. சென்ற பதினொரு மாதங்களாக உலகமெங்கும் உலாவிவரும் 'செங்குந்த மித்திர'னுக்கு எக்காலத்தும் அகாலமரணம் உண்டாகாது. ஏனெனில், இது ஒருபெரிய பொறுப்புள்ள சங்கத்தின் வெளியீடாகும். மேலும், இதற்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுத்துதவத் தயாராயிருக்கும் திருவாரூர் முனிசிபல்கவுன்சிலர் திருவாளர் T.N. சபாபதிவள்ளலாராலும், திருவாளர்கள் S. குழந்தைவேலுபிள்ளை, (Manager, Finger Print Bureau,) M. ஷண்முகசுந்தர முதலியார் M.A., L.T., மா. அ. கனகசபைமுதலியார், M B. கந்தசாமிமுதலியார் B. A. B. E. முதலிய பொறுப்புள்ள அங்கத்தினர்களையுடைய ஒரு நிர்வாக சபையைக் கொண்ட தென்னிந்திய செங்குந்த மஹாஜனசங்கத்தினாலும், குலத்தொண்டர் சிகாமணிகள் நிறைந்துள்ள அதன் கிளைச் சங்கங்களாலும், எண்ணிறந்த வியாபாரிகளாலும், ஏனைய குலாபிமானிகளாலும் ஆதரிக்கப்பெற்றுவரும் 'செங்குந்தமித்திர'னுக்கு எக்காலத்திலும் எவ்விதத்திலும் இடைஞ்சல் உண்டாவதற்கு இடமில்லை" என விடையளித்தேன். அதைக்கேட்டு அவர்கள் சந்தோஷித்துச் சந்தாநேயர்கள் ஆவதற்குச் சம்மதித்தார்கள்.

சந்தேகித்துச் சந்தா தொகையைச் செலுத்தாமலிருக்கும் சகோதரர்களே, இனியாகிலும் சந்தேகமின்றிச் சந்தாதொகையை அனுப்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

குருஸ்வாமிகள் கா. ச. ஸ்வாமிநாத தேசிகர்.

---



[illegible] வியாபாரிகள் கார்த்திகைக்கு அளித்த மகமை நன்கொடை

சைதாப்பேட்டை

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible]பண்ட் கம்பெனி | .... | 21 | 5 | 6 |
| [illegible]பாபு கம்பெனி | .... | 3 | 0 | 0 |
| திரு. ரா. ம. கோ. வாசுதேவ முதலியார் | .... | 3 | 8 | 0 |
| [illegible]ா. சுப்புராய முதலியார் | .... | 1 | 6 | 6 |
| சே. பழனி முதலியார் | .... | 0 | 13 | 0 |
| அ. கு. முருகப்ப முதலியார் | .... | 0 | 12 | 0 |
| செ. மாசிலாமணி முதலியார் | .... | 0 | 2 | 6 |
| கெ. குப்புசாமி முதலியார் | .... | 0 | 4 | 6 |
| ப. மாணிக்க முதலியார் | .... | 0 | 5 | 6 |
| ந. தங்கவேலு முதலியார் | ... | 0 | 4 | 0 |
| கோ. நடேச முதலியார் | .... | 0 | 14 | 3 |
| ம. சண்முக முதலியார் | .... | 1 | 2 | 0 |
| ம. கு. மாணிக்க முதலியார் | .... | 0 | 6 | 3 |
| தி. அ. கந்தசாமி முதலியார் | .... | 1 | 0 | 6 |
| ம. குமாரசாமி முதலியார் | .... | 0 | 5 | 6 |
| கெ. போரூரா முதலியார் | .... | 0 | 6 | 0 |
| கொ. செ. முனுசாமி முதலியார் | .... | 0 | 6 | 6 |
| S. இரத்தினவேலு முதலியார் | .... | | | |
| புரட்டாசி அற்பசி கார்த்திகை மாசத்துக்கு வசூல் | | 3 | 8 | 6 |

ஆனைக்காப்புத்தூர்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. கு. முனிசாமி முதலியார் | .... | 0 | 3 | 3 |
| பி. மு. முருகேச முதலியார் | .... | 0 | 12 | 9 |

குண்ணத்தூர்

| | | | | |
|---|---|---|---|---|
| இ. ஜெகநாத முதலியார் | .... | 1 | 11 | 0 |

செம்பாக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி. சிதம்பல முதலியார் | .... | 2 | 2 | 0 |
| அ. வேதாசல முதலியார் | .... | 0 | 12 | 0 |
| வே. இரத்தின முதலியார் | .... | 0 | 12 | 6 |
| ம. ஐம்புலிங்க முதலியார். | .... | 0 | 12 | 3 |
| ம. இ. மலைக்கொழுந்து முதலியார் கம்பெனி | | 1 | 9 | 0 |

திருமழிசை

| | | | | |
|---|---|---|---|---|
| ஐயா. முனுசாமி முதலியார் | .... | 0 | 5 | 3 |

பரங்கிமலை

| | | | | |
|---|---|---|---|---|
| வே. மு. கண்ணப்ப முதலியார் | .... | 1 | 14 | 0 |
| ஆ. பொன்னுசாமி முதலியார் | .... | 0 | 8 | 9 |

**படப்பை.**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ. மு. திருமலை முதலியார் | .... | 0 | 2 | 9 |

**மேப்பூர்.**

| | | | | |
|---|---|---|---|---|
| கா. சிவானந்த முதலியார் | .... | 1 | 6 | 0 |
| பொ. நடேச முதலியார் | .... | 0 | 3 | 6 |
| சோலை. முருகப்ப முதலியார் | .... | 0 | 8 | 3 |

**வேளச்சேரி.**

| | | | | |
|---|---|---|---|---|
| க. துரைசாமி முதலியார் | .... | 0 | 5 | 0 |

**சென்னை.**

| | | | | |
|---|---|---|---|---|
| மதராஸ் பிளையக்காட்கம்பெனி யாரால் உண்டியல் வசூல் | | 54 | 0 | 0 |
| மதராஸ் தி. ச. ரா. ம. இராமசாமி முதலியார் அவர்களால் உண்டியல் வசூல் | .... | 10 | 0 | 0 |

**மாஞ்ம்பதி அன்பர்கள் கார்த்திகை மாதத்துக்கு**

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. ச. ப. தீர்த்தகிரி முதலியார் | .... | 0 | 8 | 0 |
| ,, ச. அருணாசல முதலியார். | .... | 0 | 8 | 0 |
| ,, கு. முருகப்ப முதலியார் | .... | 0 | 8 | 0 |

குறிப்பு :—1927ஞ டிசம்பர்மீ 27உவரை வந்த "செங்குந்த மித்திரன்" சந்தாநேயருடைய பேர்களை யெல்லாம் இப் பத்திரிகையில் பிரசுரஞ் செய்தோம். இன்னும் பழைமையான சந்தாநேயர்கள் சென்ற வருடத்திய சந்தாதொகையை தயவு செய்து கூடியசீக்கிரம் அனுப்பி விட வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ம. சண்முகசுந்தர முதலியார் M. A. L. T.,
தி. நா. சபாபதி முதலியார், அமைச்சர்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்கக் குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞைவாழ்க யானைதன ணங்கும் வாழ்க
மாறிலா வள்ளிவாழ்க வாழ்கசீ ரடியாரெல்லாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

## வர்த்தமானங்கள்

பச்சையப்பன் கலாசாலை டிரஸ்டிகள் ஆதிதிராவிடர் பிள்ளைகளைத் தங்கள் கல்லூரியிலும், கலாசாலைகளிலும் படிப்பதற்குச் சேர்த்துக்கொள்வதாக நிச்சயித்திருக்கின்றனர்.

* * * * *

ருஷியாவில் கம்யூனிஸ்ட் வாலிபசங்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அதின் அங்கத்தினரின் தொகை சுமார் 20 இலக்ஷமாம். அவர்களனைவரும் ஒரு ஞாயிற்றுக்கிழமையை இலவச வேலையின் நிமித்தம் கழித்து, அதன் வூதியத்தைப் பெற்றோரில்லா மக்களின் பாதுகாப்பிற்கென நியமித்திருக்கிறார்களாம்.

* * * * *

பென்ஷன் வாங்கி வந்த ஹைகோர்ட் ஜட்ஜும், இந்துமத பரிபாலன சபையின் அக்கிராசனருமாகிய (President, Hindu Religious Endowment Board) மகாகனம்ஜஸ்டிஸ் திவான் பஹதூர் ஸர். டி. சதாசிவ அய்யர் அவர்கள் பி. ஏ., எம். எல்., 24-11-27-ல் விண்ணுலகடைந்தனர்.

* * * * *

மூன்றும் முறையாக இவ்வருடம் சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் "ஜலதூதன்" என்னும் மரக்கலத்தைப் பண்டிட் மோதிலால் நேஹரு அவர்களைக் கொண்டு அநேக ஹிந்து சடங்குகளுடன் மிதப்பச் செய்தனர்.

* * * * *

பிரிடிஷ் ராணுவத் தலைவர்களான சார்லஸ் ஆலிவர் என்பவரும் கப்பிடேர மாலின்ஸ் என்பவரும் மோடார் சைகில் வண்டிகளில், சைடிகார்களுடன் உலகமுற்றும் சுற்றி வந்தார்களாம். அவர்கள் சுமார் 23,800 மைல் தூரம் ஐந்து கண்டங்களிலும் சென்றதாகத் தெரிகிறது.

* * * * *

லண்டன் நகரத்திலுள்ள இந்தியா கவுன்சில் மெம்பராயும், சென்னைச் சட்டசபை முதல் அக்கிராசனராயும் (பிரசிடெண்ட்) இருந்தவரும், அரசாங்க விஷயத்தில் வெகு நிபுணருமான மகாகனம் சர். பி. இராஜகோபாலாச்சாரியா அவர்கள் எம்.ஏ.,பி.எல்., சென்ற 1-12-27 காலையில் வைகுண்டலோக மடைந்தனர்.

* * * * *

தென் இந்திய எக்ஸ்போர்ட் கம்பெனியின் தபாஷாயிருக்கும் ராவ் பகதூர் வி. ஷண்முக முதலியார் அவர்கள் வருகிற வருடம் சென்னை நகர 'ஷெரீப்' ஆக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

* * * * *

சென்னை பச்சையப்பன் உயர்தரக் கலாசாலைத் தலைமையாசிரியராயிருந்த (பிரின்ஸிபல்) புரொபஸர் ரத்தினசாமி (M. A..

Bar-at-Law,) எம். ஏ., பார்-அட்-லா, எம். எல். ஏ. அவர்களைச் சென்னை லா காலேஜ் (சட்ட உயர்தரபாடசாலை) பிரின்ஸிபலாக நியமித்திருக்கின்றனர். இவர் சென்னைச் சட்டசபையின் அக்கிராசனராக இருந்தனர்.

* * * * *

சென்னைச் சட்டசபை டெப்டி பிரஸிடெண்டாயுள்ள டாக்டர் எஸ். முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மாள் அவர்கள் கீழ்க்கண்ட ஒரு சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதாக சொல்லுகிறார்:—

* * * * *

"எவர்களாயினும் 18-வயதிற்குட்பட்ட சிறுவனுக்கும் 14 வயதிற்குட்பட்ட சிறுமிக்கும் மணம் புரிவித்தாலும், அல்லது புரிவிப்பதாக நிச்சயித்தாலும், ஆறுமாத காலமேனும் காவலிடுதலாயினும், அல்லது ஆயிரம் ரூபாய் அபராதமாயினும், அல்லது அவ்விரண்டையும் அவர்களுக்கிடவேண்டும்."

* * * * *

சென்னை ஐகோர்ட் ஜட்ஜிகளின் தொகை ஸ்திரமாக இப்போதுள்ள 12 இருந்து 14-க்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

சென்னைக்கு ஜலம் உதவும் புழலேரியிலிருந்தாவது சோழவரம் ஏரியிலிருந்தாவது அவ்வேரிகளின் நீர்மட்டம் 44½ அடி வந்தாலல்லது சாகுபடிக்கு ஜலம்உபயோகிக்கக் கூடாதென்று திட்டம் செய்திருக்கிறார்கள்.

* * * * *

சென்னையில் S. I. A. A. மைதானத்தில் வழக்கப்படி இவ்வருடமும் டிசம்பர் மீ 24-ந் தேதி முதல் ஜனவரி மீ 12-ந் தேதி வரையில் வேடிக்கை விளையாட்டுப் பந்தயங்களும் பாணவேடிக்கையும் சித்திர வேலை முதலிய காக்ஷிகளும் நடைபெறும்,

* * * * *

சர்வ இந்திய 42-வது காங்கிரஸ் மகாநாடு இவ்வருடம் சென்னையில் டிசம்பர் மீ 26-ந் தேதி முதல்கொண்டு நடைபெறும். டாக்டர் அன்சாரி என்பவரை அக்கிராசனராகவும், திருவாளர் C. N. முத்துரங்க முதலியாரை வரவேற்புக் கமிட்டி சேர்மெனாகவும் நியமித்துள்ளார்.

* * * * *

காங்கிரஸ் ஆதீனத்தில் ஒரு பெரிய பொருட் காக்ஷியும் கதர்வஸ்திரக் காக்ஷியும் எழும்பூருக்கு மேற்கிலுள்ள எழும்பூர் ஏரியில் ஒருமாதத்துக்கு நடைபெறும். அவ்வமயம் நம்செங்குந்த மக்கள்அவ்விடம் விஜயம் செய்கையில் அதில் காட்டப்படும் பாவு தோய்தல், நெய்தல், விவசாயம் சம்பந்தமான நூதன முறைகளைக் கவனிக்க வேண்டுகிறோம்.

---

# THE RULES

OF

**he South Indian Sengantha Mahajana Sangam, Madras.**

1. *Name*:—This Sangam shall be called 'The South Indian Senguntha Mahajana Sangam'.

2. *Object*:—The object of the Sangam * shall be the upliftment of the Sengunthar community.

*Means*:—This object shall be secured by,

(1) Organising associations of Sengunthars in each and every locality where Sengunthars live in large numbers, and bringing them together under the direction of the South Indian Senguntha Mahajana Sangam;

(2) Gathering and consolidating from time to time the opinions of all such associations on important questions relating to the community, and taking steps to solve them with a view to the betterment of the community;

(3) Holding periodical conferences of representatives of the community for discussing problems relating to them, and for promoting communal sympathy, co-operation, and solidarity amidst them;

(4) Arranging for lectures and publishing pamphlets of an educative and propagandist value;

# தென்னிந்திய செங்குந் மகாஜன சங்கத்தின் சட்டதிட்டங்கள்

1. பெயர்:—இச்சங்கம் 'தென் னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் எனப் பெயர் பெறும்.

2. நோக்கம்:—செங்குந்த சமூ கத்தை முன்னேற்ற மடையச் செய் வதே இச்சங்கத்தின்* நோக்கமாகும்

இந்நோக்கம் கீழ்க்கண்ட சாதன களால் சாதிக்கப் பெறும்:—

(1) செங்குந்தர்கள் பெருங்கூட்ட மாய் வதியும் இடம் ஒவ்வொன்றி லும் செங்குந்தர் சங்கங்கள் நிறுவி அவற்றை இத் தென்னிந்திய செ குந்த மகாஜன சங்கத்தின் தலைமை யின்கீழ்க் கொண்டுவருதல்;

(2) குல முன்னேற்றின் பொரு ட்டு நம் குலசம்பந்தமான முக்கிய குறைபாடுகளைக் குறித்து அப்பே தைக்கப்போது அத்தகைய சங்கங் ளின் அபிப்பிராயங்களைச் சேகரித் வெளியிட்டு அவற்றை நிவர்த் செய்ய ஏற்பாடுகள் செய்தல்;

(3) குல சம்பந்தமான விஷய களை ஆராய்ந்து யோசிக்கும் பொரு ட்டும், நம்மவருள் குலாபிமானத்தை யும் ஒற்றுமையையும் கட்டுப்பா டையும் விருத்திசெய்யும் பொருட் டும் நம் சமூகப்பிரதிநிதிகள் கூடி மகாநாடுகளை அப்போதைக்கப்போ கூட்டுதல்.

(4) நல்லறிவையும் குலாபிமான தையும் ஊட்டவல்ல உபந்யாசங்க செய்வதற்கும் துண்டு பத்திரிகை கள் வெளியிடுவதற்கும் ஏற்பாடுக செய்தல்;

(5) Conducting a journal entitled *Sengunthamitran* as the organ of the Mahajana Sangam * in Tamil;

(6) Preparing and publishing books relating to the past, present, and future of the community;

(7) Instituting a Common Benefit Fund for the exclusive benefit of members of the community;

(8) Securing for the Sangam endowments and donations to form a permanent fund for instituting scholarships and a Free Sengunthar Hostel in Madras for poor youths of the community who may aspire for higher education;

(9) Securing for the community representation in all the statutory councils and public offices of the country, and agitating in all legitimate ways for the betterment of the community;

(10) And doing such other things as may be incidental and conducive to the attainment of the object of the Sangam. *

3. *Office*:—The office of the Sangam shall be located at Madras.

---

* The words 'Sangam' and '**Mahajana Sangam**' shall in these **articles signify** 'The South Indian **Senguntha** ' Mahajana Sangam, **Madras.**'

(5) மகாஜன சங்கத்தின் வெளியீடாகத் தமிழில் 'செங்குந்தமித்திரன்' என்னும் பெயர் புனைந்த ஒரு பத்திரிகையை நடத்தல்;

(6) செங்குந்த சமூகத்தின் பண்டைகால தற்கால நிலைமைகளைக் குறித்தும், இனி நடந்து கொள்ள வேண்டிய முறைகளைக் குறித்தும் விளக்கக்கூடிய நூல்களைத் தயாரித்து வெளியிடுதல்;

(7) செங்குந்த குலமக்கள் நன்மைக்காகவே ஒரு பொது உபகார நிதி ஸ்தாபித்தல்;

(8) உயர்தரகல்வி கற்க விரும்பும் ஏழைச் செங்குந்த பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கும், தர்ம உண்டிச் சாலை ஏற்படுத்துவதற்கும் உதவவல்ல ஒரு சாசுவத நிதியைத் திரட்டிவைக்கும்பொருட்டுச் சங்கத்துக்குச் சொத்துக்களும் நன்கொடைகளும் சேகரித்தல்;

(9) அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள(தலஸ்தாபனம், சட்டசபை முதலிய) சபைகளிலும் உத்தியோக சாலைகளிலும் செங்குந்த சமூகத்திற்குப் பிரதிநிதித்துவம் பெற்றுச் சமூக முன்னேற்றத்திற்காக நியாயமான எல்லா வழிகளிலும் கிளர்ச்சி செய்தல்;

(10) சங்கத்தின்* நோக்கத்தை முற்றுவிப்பதற்கு அவ்வப்போது அவசியமாகவும் அனுகூலமாகவும் தோன்றும் இத்தகைய மற்ற எல்லாக் காரியங்களையும் செய்தல்.

3. காரியநிலையம் (ஆபீஸ்):- இச் சங்கத்தின் காரியநிலையம் சென்னையிலிருத்தல் வேண்டும்.

---

* இச்சட்டங்களில் 'சங்கம்', 'மகாஜன சங்கம்', 'தலைச்சங்கம்' என்னும் தொடர்கள் 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்'தையே குறிக்கும்.



4. *Constitution*:—The Sangam **shall have a federal constitution having affiliated associations of Sengunthars as its constituent units.** Any association of Sengunthars already in existence, or to be started, having objects not antagonistic to those of the Sangam shall be eligible for affiliation as a constituent unit of the Sangam. Every constituent unit shall be bound to pay to the Sangam an annual subscription to be determined by mutual agreement, taking into consideration the numerical and financial strength of the association. Each constituent unit shall be represented in the General body of the Mahajana Sangam by its (the constituent unit's) secretary and another of its members, who shall be formally elected at a meeting of the association to be held for the purpose once in three years. These elected representatives of the constituent units shall form the General Body of the Mahajana Sangam.

Each constituent unit of the Mahajana Sangam shall so devise its constitution and plan of work as shall be deemed necessary by local needs and conditions, without any interference on the part of the Mahajana Sangam except by way of co-operation and support, but shall in no way act counter to the objects and general policy of the Mahajana Sangam as declared in its rules, bye-laws, and pamphlets issued from time to time. Non-payment of subs-

4. அமைப்பு:—இம்மகாஜன சங்கம்,* தன்னோடு சேர்க்கப்பட்ட செங்குந்தர் சங்கங்களையே தனக்கு அங்கங்களாகக் கொண்டு அவற்றால் உதவி பெறுவதும் அவற்றை ஆதரிப்பதுமாகிய ஒரு 'தலைச்சங்க'த்தின் திட்டத்தையுடையதாகும். இச் சங்கத்தின் நோக்கங்களுக்கு மாறுபடாத நோக்கங்களையுடைய எந்தச் செங்குந்தர் சங்கமும், முன்னமே நிறுவப் பெற்றதாயிருப்பினும், இனி நிறுவப் பெறுவதாயினும், இச் சங்கத்தின் அங்கமாகச் சேருவதற்கு யோக்கியதையுண்டு. இப்படி அங்கமாகச் சேரும் சங்கம் 'கிளைச் சங்க'மெனப்படும். அங்கமாகிய ஒவ்வொரு கிளைச் சங்கமும் தனது அங்கத்தினரின் எண்ணிக்கை அல்லது பொருள் வருவாய்க்குத் தக்கவாறு செய்து கொள்ளும் ஏற்பாட்டின்படி தலைச்சங்கத்*திற்கு வருஷ சந்தாவைச் செலுத்தக் கடமைபட்டிருக்கிறது. அங்கமாகிய ஒவ்வொரு கிளைச் சங்கமும் தலைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்குப் பிரதிநிதிகளாக அதன் காரியதரிசியையும் மற்றொரு அங்கத்தினரையும் மூன்று வருஷத்திற்கொருமுறை தேர்ந்தெடுத்தல் வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டமே தலைச்சங்கத்தின் 'பொதுக் கூட்ட'மாகும்.

இம் மகாஜன சங்கத்தின் அங்கமாகிய ஒவ்வொரு கிளைச் சங்கமும் தனக்கு வேண்டிய சட்ட திட்டங்களையும் வேலை செய்யும் முறையையும் அவ்வவ்விடங்களின் தேவைக்கும் நிலைமைக்கும் அவசியமானபடி அமைத்துக் கொள்ளலாம். ஆயினும், தலைசங்கம் தனது சட்டதிட்டங்களிலும், அப்போதைக்கப்போது பிரசுரஞ் செய்யும் பத்திரிகைகளிலும், வெளியிட்டுள்ள நோக்கங்களுக்கும் முறைக்கும் விரோதமான வழியில் கிளைச்சங்கங்கள் நடந்து கொள்ளக் கூடாது. யாதாமொரு கிளைச்சங்கம்

cription for one year, or any action which shall be deemed prejudicial to the interests of the Mahajana Sangam, on the part of any constituent unit, shall result in its being disaffiliated from the Mahajana Sangam.

5. *General Body:*—The General Body of the Mahajana Sangam shall meet every time a Sengunthar Conference is convened by the Sangam, which shall, as far as may be convenient, be annual, and at any time in the interval the governing body of the Sangam may deem it necessary to convene it for deciding questions of pressing importance. The meeting of the General Body at the time of the annual Conference shall be considered to be its annual meeting. All other meetings of the Body that may be convened in the interval shall be considered to be Extraordinary Meetings. Notices of these meetings with their agenda shall be sent at least 15 days before the date of meeting. The quorum for a General Body Meeting shall be a fourth of the number on the rolls at the date. The General Body at its Annual Meeting shall discuss and adopt the annual report and financial statement of the previous year placed before it by the Governing Body, and any other matters that may be brought up for discussion. The General Body shall elect the members constituting the Governing Body once in three years at its annual meeting. All the resolutions passed by the General Body shall be binding on the Governing Body.

வருஷக்கட்டணம் செலுத்தத் தவறினாலும், அல்லது தலைச் சங்கத்தின் நன்மைக்குப் பாதகமானதெனக் கருதப்படும் எந்தக் காரியத்தைச் செய்தாலும் தலைச் சங்கத்தோடு யாதொரு சம்பந்தமுமில்லாதவாறு நீக்கப்படும்.

5. பொதுக் கூட்டம்:— தலைச் சங்கத்தின் பொதுக் கூட்டம் செங்குந்தர் மகாநாடு கூட்டப்படும் ஒவ்வொரு சமயத்திலும் கூடும். மகாநாடு கூடியவரையில் வருஷா வருஷமும், இடையில் தலைச் சங்கத்தின் நிருவாக சபையார் மிக முக்கியமான விஷயங்களைக் குறித்துத் தீர்மானிக்கும் பொருட்டுக் கூட்டும் காலங்களிலும், கூடும். மகாநாடு நடைபெறும் காலத்தில் கூடும் பொதுக்கூட்டமே தலைச்சங்கத்தின் 'வருஷாந்தர கூட்ட'மாகும். மத்தியில் கூடும் மற்றெல்லாப் பொதுக்கூட்டங்களும் சங்கத்தின் 'விசேஷப் பொதுக் கூட்டங்'களாம். இக்கூட்டங்களின் அறிக்கை அவற்றின் நிகழ்ச்சி முறையுடன் கூட்டம் நடைபெறும் தேதிக்குக் குறைந்தது 15 நாட்கள் முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

பொதுக்கூட்டம் நடைபெறும் தேதியிலுள்ள கிளைச்சங்கப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் குறைந்தது நாலில் ஒருபங்கு வந்திருந்தால்தான் அப்பொதுக் கூட்டம் நடத்தப்படும். வருஷாந்தர பொதுக் கூட்டத்தில் நிருவாக சபையாரால் சமர்ப்பிக்கப்படும் வருஷாந்தர அறிக்கைப் பத்திரமும், முன் வருஷத்திய வரவு செலவு கணக்கும் அங்கீகரிக்கப்படுவதோடு, அங்கு கொண்டுவரப்படும் இதர விஷயங்களும் யோசிக்கப்பெறும். மூன்று வருஷத்திற்கொரு முறை வருஷாந்தரப் பொதுக் கூட்டத்தில் நிருவாகசபை அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் பெறுவர். பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பெறும் எல்லாத் தீர்மானங்களும் நிருவாக சபையைக் கட்டுப்படுத்தும்.



6. *Governing Body:*— The affairs of the Mahajana Sangam shall be carried on by a Governing Body consisting of a president, not less than two vice-presidents, two joint secretaries, a treasurer, and not less than seven other members to be elected once in three years by the General Body. Every one of the members of the Governing Body shall be eligible for re-election after the expiry of their term.

The Governing Body shall be competent to co-opt members to such extent and for such purposes as it may consider necessary. The Governing Body shall also be competent to fill up vacancies arising within it in the interval between one General Body Meeting and the next. It shall be the duty of the Governing Body to take such steps as it may deem expedient and practicable to carry out the objects of the Sangam as well as the resolutions of the General Body and the Conferences.

The Governing Body shall meet regularly on the last Saturday of every month for the purpose of scrutinising and auditing the accounts and discussing other matters that may be brought up before it by the joint secretaries. The agenda for each meeting of the Governing Body shall be sent by the secretaries so as to reach each member at least five days before the date of the meeting. The quorum for a meeting of the Governing Body shall be five. If within thirty minutes from the time appointed for the meeting

6. நிருவாக சபை:—இம் மகாஜன சங்கத்தின் காரியங்கள், மூன்று வருஷங்களுக் கொருமுறை வருஷாந்தர பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தலைவர், இரண்டிற்குக் குறையாத உபதலைவர்கள், இரண்டு அமைச்சர்கள், ஒரு பொருட்காப்பாளர், ஏழுக்குக் குறையாத இதர அங்கத்தினர் ஆகிய இவர்கள் கூடிய ஒரு நிருவாக சபையால் நடத்தப் பெறும். நிர்வாக சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் உரிய காலம் கடந்தபிறகு மறுபடியும் தேர்தலுக்கு நிற்கத் தகுதியுண்டு.

நிருவாக சபையார் தமக்கு அவசியமெனத் தோன்றும் அளவுக்கும் காரியங்களுக்கும் புதிய அங்கத்தினரைச் சேர்த்துக் கொள்ளலாம். ஒரு பொதுக் கூட்டத்திற்கும் அடுத்த பொதுக் கூட்டத்திற்கும் மத்தியில் ஏற்படும் காலிஸ்தானங்களுக்கு அங்கத்தினரை நியமித்துக் கொள்ள நிருவாகசபைக்குத் தகுதியுண்டு. சங்கத்தின் நோக்கங்களையும் அதன் பொதுக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களையும் சாத்தியமான வரையில் நடவடிக்கைக்குக் கொண்டுவர முயலுவது நிருவாக சபையின் கடமையாகும்.

கணக்குப் பரிசோதனை செய்வதற்கும், அமைச்சர்களால் கொண்டுவரப்பெறும் வேறு விஷயங்களைப் பற்றி யோசிப்பதற்கும் நிருவாகச் சபையானது ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை தவறாது கூட வேண்டும். ஒவ்வொரு நிருவாகசபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி முறைக்குறிப்பு கூட்டம் கூடும் தேதிக்குக் குறைந்தது ஐந்து நாட்கள் முன்னதாக ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அமைச்சர்களால் அனுப்பப்படல் வேண்டும். நிருவாக சபைக் கூட்டம் நடைபெறுவதற்குக் குறைந்தது ஐந்து அங்கத்தினர்கள் ஆஜராயிருத்தல் வேண்டும். கூட்டம் கூடக் குறித்த நேரத்தி

a quorum is not available, the meeting shall be dissolved and stand adjourned to the next Saturday, and, if at such adjourned meeting there is no quorum, the members present shall form the quorum, and transact the business for which the meeting has been called. Mofussil members, who may feel it inconvenient to attend any monthly meeting of the Governing Body shall send in writing to the Joint Secretaries their views on the several items on the agenda for the meeting so as to reach them before the date of the meeting.

The Governing Body shall have power to frame bye-laws from time to time for the practical working of the rules of the Sangam, and to alter and repeal such bye-laws as it may deem necessary. Such bye-laws shall be in force and binding upon all members of the Sangam until and unless they are set aside by a resolution passed at a meeting of the General Body.

7. *Office-Bearers:—The President* of the Sangam shall be referred to, and his advice taken on all matters relating to the Sangam. He shall preside at all meetings of the Governing Body as well as over the meetings of the General Body. He shall help to do all things that are laid down by these articles in the best interests of the Sangam.

விருந்து அரைமணி நேரத்திற்குள் இச்சங்கியை சேரவில்லையானால் அக்கூட்டம் மறு சனிக்கிழமைக்குத் தள்ளிவைக்கப் பெறும். அவ்வாறு தள்ளிவைக்கும் கூட்டத்திற்கும் சங்கியை சேரவில்லையானால் ஆஜராயிருக்கும் அங்கத்தினரைக் கொண்டே அக்கூட்டம் நடத்தப் பெறும். மாதாந்தர நிருவாக சபைக் கூட்டங்களுக்கு வரச் சௌகரியமில்லாத வெளியூர் அங்கத்தினர் அமைச்சர்களுக்குக் கடிதமூலமாகக் கூட்டத்தின் நிகழ்ச்சி முறைக்குறிப்பிலுள்ள பல விஷயங்களைப்பற்றிய அவர்கள் அபிப்பிராயங்களை முன்னதாகவே தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

சங்கத்தின் சட்ட திட்டங்களை நடவடிக்கைக்குக் கொண்டுவரும் நிமித்தம் அவ்வப்போது உபசட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளவும், அவசியமாயின் உபசட்டங்களை மாற்றவும் ரத்து செய்யவும் நிருவாக சபைக்கு அதிகாரமுண்டு. அவ்வித உபசட்டங்கள் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பெறும் தீர்மானத்தினால் தள்ளுபடியாகிறவரையில் நடவடிக்கையில் இருப்பதன்றி, அவற்றிற்குச் சங்கத்தின் எல்லா அங்கத்தினரும்கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

7. சங்க உத்தியோகஸ்தர்கள்:— தலைவர்: சங்கச் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தலைவருக்குத் தெரிவித்து அவரது அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் எல்லா நிருவாக சபைக் கூட்டங்களிலும், பொது கூட்டங்களிலும் தலைமை வகித்தல் வேண்டும். அவர் சங்க நன்மையின் பொருட்டு இச்சட்டங்களில் காட்டியுள்ள எல்லா விஷயங்களையும் நிறைவேற்றுவதில் உதவி செய்யக்கடவர்.



*The Vice-President* shall act for the President in the absence of the latter.

In the absence of even the vice-president at any meeting of the Governing Body or the General Body any non-official member present shall be voted to the chair.

*The Joint Secretaries* shall call meetings of the Governing Body and the General Body, circulate among their members and the constituent units items of business for discussion and publish the decisions, record the proceedings of each meeting in the book or books kept for the purpose, carry on correspondence, maintain a list of constituent units, be in charge of the properties and records of the Sangam, enter into contracts and agreements authorised by the Governing Body on behalf of the Sangam, arrange to collect subscriptions and other moneys due and promised to the sangam, and be in general responsible, subject to the control of the Governing Body, for the administration of the affairs of the Sangam.

They shall prepare at the close of each year for adoption at the Annual General Body Meeting a report on the working of the Sangam for the previous year showing its progress, activities, and financial condition. The draft of the report shall be approved by the Governing Body before publication.

உபதலைவர்:—தலைவர் ஆஜராகாத காலங்களில் அவரது ஸ்தானத்தை உபதலைவர் வகிப்பர். உபதலைவரும் ஆஜராகா கூட்டங்களில் உத்தியோக சம்பந்தமில்லாத ஒரு அங்கத்தினர் ஆஜராயுள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் தலைமை வகிக்கலாம்.

அமைச்சர்:—நிருவாக சபை கூட்டங்களையும் பொதுக் கூட்டங்களையும் கூட்டுதல். அக்கூட்டங்களில் யோசிக்க வேண்டிய விஷயங்களைக் குறித்து முறையே நிருவாகசபை அங்கத்தினருக்கும் அங்கங்களாகிய கிளைச் சங்கங்களுக்கும் தெரிவித்தல், தீர்மானங்களைப் பிரசுரித்தல், ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளையும் அதற்கென வைத்திருக்கும் புத்தகங்களில் பதிவு செய்தல், கடிதப் போக்கு வரத்துக்களைக் கவனித்தல், அங்கங்களாகிய கிளைச்சங்கங்களின் வரிசைக்கிரமமாகப் பதிவு செய்து வைத்தல் சங்கத்தின் சொத்துக்களையும் தஸ்தாவேஜுக்களையும் பொறுப்புடன் பார்த்துக் கொள்ளல், (சங்கத்தின் சார்பாக) நிருவாக சபையாரின் உத்தரவுபடி காண்ட்ராக்டு, அக்கிரிமெண்டுகள் செய்தல், சந்தா தொகைகளையும், இதரபாக்கி தொகை சங்கத்திற்கு நன்கொடையாக வாக்களித்துள்ள தொகைகளையும்வசூலிக்க ஏற்பாடு செய்தல், முதலிய காரியங்களைச் செய்வதுடன், பொதுவாய்ச் சங்ககாரியங்களின் நிருவாகத்திற்கு அமைச்சர்கள் உத்தரவாதிகளாயிருப்பர்

வருஷமுடிவில்கூடும் பொதுக்கூட்டத்தின் அங்கீகாரத்திற்கு முந்திய வருஷத்தில் சங்கம் அடைந்துள்ள விருத்தி, அது செய்துள்ள வேலைகள், அதன் பொருளாதார நிலை முதலியவைகளைப்பற்றிய விவரங்கள் அடங்கிய ஒரு அறிக்கை பத்திரத்தை அமைச்சர்கள் தயாரிப்பர். இவ்வறிக்கைப் பத்திரம் வெளியிடப்படு முன் அது நிருவாக சபையால் அங்கீகரிக்கப்பெறல் வேண்டும்.

*The Treasurer* shall keep proper accounts of income and expenditure, make all disbursements through the secretaries, and be the custodian of all monies belonging to the Sangam except what may be invested in banks, provided that the balance of the cash left in the hands of the treasurer does not exceed Rs. 20/- at any time.

8. *The Funds* of the Sangam shall be invested in one or more banks at Madras, in the joint names of the Secretaries and the Treasurer.

9. *Conference*:— An annual Conference of Sengunthars shall be held during the Christmas vacation at such place as may be decided upon at the previous Conference. Each constituent unit of the Mahajana Sangam shall be entitled to send not less than five representatives of its own, and every Sengunthar village or locality at least one, as delegates to the Conference, and they shall have the right to vote on all resolutions that may be moved at the Conference, on their paying each a delegate fee of not less than one rupee only, to be fixed from time to time, to the Secretary of the Reception Committee that may be formed for the purpose. The quorum for the Conference shall be a third of the delegates enrolled.

**பொருட் காப்பாளர்**:—இவர் வரவு செலவு கணக்கைச் சரியானபடி வைத்திருப்பதன்றி அமைச்சர்கள் மூலமாய் எல்லாப் பட்டுவாடாக்களையும் செய்து, பாங்கிகளில் கட்டியுள்ள பணம் போகச், சங்கத்திற்குரிய மற்றெல்லாப் பணத்திற்கும் காப்பாளராயிருப்பர். இவர்கையிலெச்சமயத்திலும் இருபது ரூபாய்க்கு மேற்பட்ட தொகை இருக்கலாகாது.

8. **சங்கத்தின் நிதி**:—சங்கத்தின் இருப்பு அமைச்சர்கள், பொருட் காப்பாளர், இவர்களின் கூட்டுப் பெயரில் சென்னையிலுள்ள ஒன்று அல்லது பல பாங்கிகளில் கட்டி வைக்கப் பெறும்.

9. **மகா நாடு**—செங்குந்தர் வருஷாந்தர மகா நாடு முந்திய மகா நாட்டுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பெற்ற இடத்தில் கிறிஸ்த்மஸ் விடுமுறை காலத்தில் கூட்டப் பெறும். மகா நாட்டுக் கூட்டத்திற்குத் தலைச் சங்கத்தின் அங்கமாயிருக்கிற ஒவ்வொரு கிளைச்சங்கமும் ஐந்துக்கு குறையாத பிரதிநிதிகளையும், கிளைச் சங்கமில்லாத ஒவ்வொரு செங்குந்தர் கிராமமும் குறைந்தது ஒரு பிரதிநிதியும் டெலிகேட்டுகளாக அனுப்ப உரிமை பெறும். இவர்களுக்கு மகா நாட்டுக் கூட்டத்தில் கொண்டுவரப் பெறும் எல்லாத் தீர்மானங்களைக் குறித்தும் வோட்டுக் கொடுக்கச் சுதந்தரம் உண்டு. மகா நாட்டிற்கென அமைக்கப் பெறும் வரவேற்புச் சபைக் காரியதரிசியினிடம் அவ்வக் காலங்களில் நிர்ணயிக்கப் பெறும் ரூபாய் ஒன்றுக்குக் குறையாத டெலிகேட் கட்டணத்தை அவர்கள் செலுத்திய பிறகே டெலிகேட்டுகளாகப் பதிவு செய்யப் பெறுவர். அவ்வாறு அவர்கள் பதிவு செய்யப் பெற்ற டெலிகேட்டுகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு ஆஜராயிருந்தால் மகா நாடு நடத்தப் பெறும்.



If no decision has been arrived at at a previous Conference regarding the venue of the next Conference, the Governing Body of the Sangam shall decide it. It shall also be open to the Governing Body to change the venue of the Conference to any other place or time when such change is deemed by it necessary. The secretary of the constituent association situated in the place determined for the holding of the Conference shall, at the instance of the joint Secretaries of the Mahajana Sangam, convene a preliminary meeting of the representatives of all the constituent units in the District to concert measures for making the Conference a success.

*A Special Conference* may be convened by the Governing Body, or on requisition from a majority of the constituent units at any time in the year if necessity arises.

10. *Reception Committee*:— The representatives of the Constituent units of the District in which the Conference is to be held shall form the Reception Committee with power to co-opt. Each member of the Reception Committee shall pay a Reception Committee Membership fee of not less than Rs 3/-. They shall elect from among themselves a chairman for the Reception Committee and a special secretary for making the necessary arrangements for the Conference.

முந்திய மகா நாட்டில் அடுத்த மகா நாடுகூடும் இடம் இன்னதென்று தீர்மானிக்கப்படாவிட்டால் அதைத் தலைச்சங்கத்தின் நிருவாக சபை நிச்சயிக்கும். நிருவாக சபைக்கு அவசியமெனத் தோன்றின் மகாநாடு கூட்டக் குறித்துள்ள இடத்தையாவது காலத்தையாவது மாற்றவும் உரிமையுண்டு.

மகா நாடுகூட்டத் தீர்மானித்திருக்கும் இடத்திலுள்ள கிளைச் சங்கத்தின் காரியதரிசி தலைச்சங்க அமைச்சர்களின் வேண்டுகோளின் மேல் மகா நாட்டைச் சிறப்பாக நடத்துதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு, முதலில் அஜ் ஜில்லாவிலுள்ள எல்லாக் கிளைச்சங்கப்பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்று கூட்ட வேண்டும்.

**சிறப்பு மகாநாடு**:—அவசியம் ஏற்படுமாயின் வருஷத்திற்குள் எப்போதாவது தலைச்சங்கத்தின் நிருவாக சபையின் தீர்மானத்தினாலாவது அங்கங்களாகிய கிளைச் சங்கங்களின் வேண்டுகோளினாலாவது சிறப்பு மகாநாடு கூட்டப்பெறும்.

10. **வரவேற்புச்சபை**—மகா நாடு கூடும் ஜில்லாவிலுள்ள கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகளது கூட்டமே மகாநாட்டின் வரவேற்புச்சபையாகும். இச்சபைக்கு மற்றும் சிலரை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளவும் அதிகாரமுண்டு. இதன் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ரூபாய் மூன்றிற்குக் குறையாமல் வரவேற்புச் சபை அங்கத்தினர் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இவர்கள் தங்களுக்குள்ளாகவே தலைவர் ஒருவரையும் சிறப்புக்காரியதரிசி ஒருவரையும் மகாநாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்பொருட்டுத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

The joint secretaries of the Mahajana Sangam shall be ex-officio joint secretaries of the Reception Committee. The Reception Committee shall make all necessary arrangements for the successful conduct of the Conference, choose and invite the gentlemen that shall open and preside over the Conference, draft the resolutions that have to be moved at the Conference, determine the order of business of the Conference in consultation with the Governing Body of the Sangam, and provide the necessary funds for meeting all the expenses of the Conference as also that of preparing, printing, publishing and distributing the report of the Conference to the constituent units and others to whom they may have to be sent. The delegates' fees shall form part of the funds of the Reception Committee, besides any donations they may raise for the purpose. Any surplus funds that may be left over in the hands of the Reception Committee shall be credited to the account of the Mahajana Sangam. The Reception Committee shall submit a statement of accounts relating to the Conference to the Governing Body of the Mahajana Sangam within a month from the holding of the Conference.

தலைச்சங்கத்தின் அமைச்சர்கள் தங்கள் உத்தியோக உரிமையினால் வரவேற்புச்சபையின் கூட்டுக் காரியதரிசிகளாயிருப்பார்கள். மகா நாட்டைச் செவ்வனே நடந்தேறுதற்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்தல், மகா நாட்டைத்திறந்து வைத்து அதற்குத் தலைமைவகிக்கவேண்டிய கனவான்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை வரவழைத்தல், மகா நாட்டில் ஆலோசனைக்குக் கொண்டுவர வேண்டிய பிரேரபனைகளைத் தயாரித்தல், தலைச் சங்கத்தின் நிருவாக சபையாருடன் கலந்து யோசித்து மகாநாட்டுக் கூட்டத்தின் நிகழ்ச்சி முறையை நிர்ணயித்தல், மகா நாட்டின் செலவிற்கு வேண்டிய பொருளைச் சேகரித்தல், மகாநாட்டின் நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கைப் பத்திர முதலியவைகளைத் தயாரித்து அச்சிட்டு வெளியாக்கிக் கிளைச் சங்கங்களுக்கும் அவசியமான மற்றவர்களுக்கும் அனுப்புதல் ஆகியகாரியங்களை வரவேற்புச் சபையார்செய்வர். மகாநாட்டிற்கென வாங்கப்படும் நன்கொடையேயன்றி டெலிகேட்டு கட்டணமும் வரவேற்புச்சபையின் அபிமானத்துடன் சேர்த்துக் கொள்ளப் பெறும். மகாநாடு நடைபெற்றபிறகு வரவேற்புச் சபையாரிடம் மிகுதியாக ஏதாவது பொருள் நிற்குமாயின் அதைத் தலைச் சங்கத்திற்கு அனுப்பிவிட வேண்டும். மகா நாடு கூடிய ஒரு மாதத்திற்குள் வரவேற்புச் சபையார் தலைச் சங்கத்தின் நிருவாக சபைக்கு மகா நாட்டுச் சம்பந்தமான கணக்குகளை அனுப்ப வேண்டும்.

11. *The Subjects Committee*, of which the President of the Conference, shall be the ex-officio Chairman, shall be the entire body of delegates present for the Conference, unless when the number is considered to be unwieldy by the president, in which case he shall empower the delegates of each district to elect not less than two of their number to represent their district in the Subjects Committee.

The Chairman of the Reception Committee, its secretary, and all office-bearers of the Mahajana Sangam shall be ex-officio members of the Subjects Committee. The president shall have the discretion to nominate not more than five additional members to make up any deficiency he may think of setting right.

11. விஷயாலோசனை சபை:— மகா நாட்டிற்கு வந்துள்ள எல்லா டெலிகேட்டுகளும் விஷயாலோசனை சபையின் அங்கத்தினராவர் மகா நாட்டின் தலைவரே தமது பதவிபற்றி விஷயாலோசனை சபையின் தலைவருமாவர். வந்துள்ள டெலிகேட்டுகளின் மிகப் பெரிதெனத் தலைவர் கருதுவாராயின், அவர்ஜில்லா ஒன்றுக்கு இரண்டிற்குத் தொகை குறையாத நபர்களைத் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கும்படி அந்தந்த ஜில்லாவின் டெலிகேட்டுகளுக்குச் சுதந்தரம் கொடுக்கலாம். வரவேற்புச் சபையின் தலைவரும், தலைச்சங்கத்தின் அதன் காரியதரிசியும் நிருவாக சபையின் எல்லா அங்கத்தினரும் தங்கள் உத்தியோக உரிமைபற்றி விஷயாலோசனைசபையின் அங்கத்தினராயிருப்பார்கள். தலைவர் விஷயாலோசனை சபையின் தொகையில் யாதாமொரு குறையுள்ளதெனக் கருதுவாராயின் அதை நிவர்த்திக்க ஐந்துக்கு மேற்படாத அங்கத்தினரைத் தமது இஷ்டப்படி நியமித்துக் கொள்ளலாம்.

12. No addition, alteration or amendment shall be made in any of the articles of this Constitution except by a resolution adopted at an annual meeting by two thirds of the entire strength of the General Body of the Sangam. Notices of such resolutions shall be sent to the joint secretaries of the Mahajana Sangam three full months previous to the Annual Meeting of the General Body.

12. பொதுஜன கூட்டத்தின் மொத்தஎண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினரால் அங்கீகரிக்கப் பெற்ற தீர்மானத்தாலன்றி இத்திட்டத்தின் எப்பகுதியிலும் கூட்டுதலாவது மாற்றுதலாவது செய்யலாகாது. அத்தகைய தீர்மானங்களைக் கொண்டுவர விருப்பங்கொள்ளும் அங்கத்தினர் தமது கருத்தை அமைச்சர் வருஷாந்தர பொதுக்கூட்டம் கூடுவதற்கு பூராக மூன்றுமாதம் முன்னதாகவே மகாஜன சங்கங்களுக்கு எழுத்துமூலந் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

# செங்குந்த மித்திரன் பஞ்சாங்கம்

## கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது

### பிரபவஹு மார்கழிமீ, தைமீ, 1928. ஜனவரிமீ

தக்ஷிணாயனம், ஹேமந்த, கலி-5029, பசலி-1337, சாலி-1850, பிரபவ-1

| ஜனவரி. | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேடநாட்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | ஞாயி | நவமி, 47-[illegible] | ரே, 24-30 | அ,24-30சி | வாயிலார்மருக |
| 2 | 18 | திங்க | தசமி, 41-50 | அசு, 20-34 | சி, 60 | அடுப்பு வைக்க |
| 3 | 19 | செவ் | ஏகா, 35-40 | பர, 16-10 | சி, 60 | வைகுண்ட ஏக |
| 4 | 20 | புத | துவா, 29-25 | கிரு, 11-43 | அ, 11-43சி | கடன் தீர்க்க |
| 5 | 21 | வியா | திர, 23-18 | ரோக, 7-50 | ம, 60 | பிரயாணம் வில |
| 6 | 22 | வெ | சது, 17-30 | மிரு, 3-12 (திருவாதிரை | சி, 60 | ஆருத்ரா தரிச |
| 7 | 23 | சனி | பௌ, 12-30 | புன, 57-7 | சி, 60 | கோடியுடுக்க |
| 8 | 24 | ஞாயி | பிர, 8-37 | பூச, 55-45 | சி, 60 | விதைவிதைக்க |
| 9 | 25 | திங்க | துவி, 5-59 | ஆயி, 55-53 | சி,55-53 ம, | நவக்கிரகசாந்தி |
| 10 | 26 | செவ் | திரி, 4-50 | மகம், 57-37 | சி, 60 | கிணறுவெட்ட |
| 11 | 27 | புத | சது, 5-20 | பூர, 60-0 | அ, 60 | சித்திரம் எழுத |
| 12 | 28 | வியா | பஞ், 7-40 | பூர, 1-7 | சி 17 ம | இயற்பகை நாய |
| 13 | 29 | வெ | சஷ், 11-40 | உத், 7-12 | சி, 7-12 அ | போகி பண்டி |
| 14 | 1 | சனி | சப், 17-2 | அஸ், 12-35 | ம, 60 | சங்கிராந்தி |
| 15 | 2 | ஞாயி | அஷ், 23-20 | சித், 19-52 | சி, 60 | மாட்டுப் பொங்க |
| 16 | 3 | திங்க | நவமி, 30-1 | ஸ்வ, 27-30 | அ,27-30 ம | கன்னுபொங்க |
| 17 | 4 | செவ் | தச, 36-10 | விசா, 34-47 | ம, 34-47 சி | திருநீலகண்டர். |
| 18 | 5 | புத | ஏகா, 41-30 | அ[illegible], 40-50 | சி, 60 | சர்வ ஏகாதசி |
| 19 | 6 | வியா | துவா, 45-20 | கேட், 46-20 | [illegible],46-20 சி | கிணறுவெட்ட |
| 20 | 7 | வெ | திர, 47-40 | மூல, 49-54 | அ,49-54பி | பிரதோஷம் |
| 21 | 8 | சனி | சது, 48-30 | பூரா, 52-1 | சி, 60 | சிவராத்திரி |
| 22 | 9 | ஞாயி | அ, 47-40 | உத், 52-37 | அ, 60 | அமாவாசை |
| 23 | 10 | திங்க | பிர, 45-30 | திரு, 51-53 | அ, 51-53சி | கதிரறுக்க |
| 24 | 11 | செவ் | துவி, 42-17 | அவி, 50-1 | சி, 50 ம | கரிநாள் |
| 25 | 12 | புத | திரி, 38-10 | சத, 47-30 | சி,47-30 அ | அப்பூதியடிகள் |
| 26 | 13 | வியா | சது, 33-30 | பூரட், 44-30 | சி, 60 | மந்திரம் ஜபிக்க |
| 27 | 14 | வெ | பஞ், 28-30 | உத், 41-15 | சி, 41-15அ | சர்வமுகூர்த்தம் |
| 28 | 15 | சனி | சஷ், 23-20 | ரேவ, 37-41 | ம,37-41 சி | கலிக்கம்பர் |
| 29 | 16 | ஞாயி | சப், 18-10 | அசு, 34-23 | சி, 60 | ரதசப்தமி, |
| 30 | 17 | திங்க | அஷ், 13-5 | பர, 31-5 | சி, 31-5 ம | கதிரறுக்க |
| 31 | 18 | செவ் | நவமி, 8-20 | கிரு, 27-50 | சி, 27-5 அ | கிருத்திகை |

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

ஸி த் த




ஔ ஷ தம்

| | | | | |
|---|---|---|---|---|
| அமிர்தாஞ்சனம் | டப்பி 1-க்கு | 0 | 10 | 0 |
| மோஹினி தைலம். | பாட்டில் 1-க்கு | 0 | 12 | 0 |
| படை மருந்து | [illegible] 1-க்கு | 0 | 6 | 0 |
| பல் பொடி | [illegible] | 0 | 2 | 0 |

எல்லாக் கடை[illegible]

அமிர்தா[illegible] [illegible]ம்பனி,

7. தம்புச்செட்டி தெருவு, சென்னை.

PRINTED AT THE "NOBLE PRESS" TRIPLICANE, MADRAS, S.E.